Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

3 NOV 2004

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-10705)


நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-18 | 03-11-2004 | புதன்கிழமை | ஓசை -259

# சந்திரிகாவின் இந்திய விஜயத்தின்போது

# பாதுகாப்பு ஒப்பந்தத் திகதி நிர்ணயிக்கப்படும்

## இந்திய இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்திய விஜயத்தின்போது இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் திகதி நிர்ணயிக்கப்படும் என இந்திய இராணுவத்தளபதி எம்.என்.விஜ் தெரிவித்துள்ளார். நேற்று சிறிலங்கா கடற்படைத்தளபதியும் படைத்தலைமை அதிகாரியுமான தயாசந்தகிரியுடனான சந்திப்பின் பின் அவர் இவ்வாறு கூறினார்.**

ஒப்பந்தம் குறித்து மேலும் இந்தியத் தளபதி கூறுகையில், இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவைவிட இலங்கைக்கே அதிக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்குமெனவும் கூறினார். இதேவேளை இந்திய இராணுவத்தளபதி நேற்று மாலை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது இலங்கை இந்திய பாதுகாப்புத் தொடர்பாகவும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான இராணுவ ஒத்துழைப்புக் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவந்துள்ள இதேவேளை இந்திய இராணுவத்தளபதி விஜ், சனாதிபதி மற்றும் பிரதமர் எதிர்க்கட்சித்தலைவர் வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வருடம் 2-ஆம் கட்டமாக
## தமிழீழ மீட்புநிதிக்கடன் 4000 பேருக்கு மீளளிப்பு

| | | |
|---|---|---|
| 1 | நல்லூர் | 510 |
| 2 | யாழ்ப்பாணம் | 235 |
| 3 | கோப்பாய் | 387 |
| 4 | உடுவில் | 282 |
| 5 | மானிப்பாய் | 293 |
| 6 | தெல்லிப்பளை | 234 |
| 7 | சங்கானை | 305 |
| 8 | காரைநகர் | 45 |
| 9 | வேலணை | 148 |
| 10 | கரவெட்டி | 311 |
| 11 | பருத்தித்துறை | 274 |
| 12 | வடமராட்சி கிழக்கு | 19 |
| 13 | சாவகச்சேரி | 282 |
| 14 | பச்சிலைப்பள்ளி | 13 |
| 15 | கிளிநொச்சி | 373 |
| 16 | வவுனியா | 76 |
| 17 | முல்லைத்தீவு | 145 |
| 18 | மன்னார் | 68 |
| | மொத்தம் | 4000 |

மூப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நான்காயிரம் பேருக்குத் தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

இவ்வருடம் 2 வது கட்டமாக இந்த 4000 பேருக்குக் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது. மீளளிப்புக்குத் தெரிவானோர் விபரம் நாளை முதல் ஈழநாதம் நாளேட்டில் வெளிவரவுள் ளது. மீட்புநிதி மீளளிப்புப் பெறுவோர் எண்ணிக்கை அட்டவணையில்.

## முரளிதரன் உட்பட உலக உணவுத்திட்ட நன்கொடையாளர்குழு தங்கனுடன் பேச்சு


(அலுவலக செய்தியாளர்)

உலக உணவுத்திட்டத்தின் நன்கொடையாளர்களைக் கொண்ட குழு ஒன்று நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்து அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களை சந்தித்து சென்றுள்ளது.

கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுடன் இக்குழுவில் உலக உணவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் வருகை தந்திருந்தார்கள்.

இவர்களில் நோர்வே தூதரகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் சு.ஜயவர்தன. நெதர்லாந்து தூதுதரக பிரதித்தூதுவர் ஹரிவன்டிக் சுவிஸ் அபிவிருத்தி அமையத்தின் வதிவிட பிரதிநிதி றடொலப் பங்காசர் சுவிஸ் அபிவிருத்தி அமைய பிரதி வதிவிடப் பிரதிநிதி வரிஹி

(12 ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டில் சமாதானம் ஏற்படுவதன் மூலமே இரு சமூகங்களையும் ஒன்று சேர்க்க முடியும்

### சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் கிளிநொச்சியில் தெரிவிப்பு

இந்த நாட்டின் இரு சமூகங்களையும் ஒன்று சேர்க்க வேண்டுமாயின் முதலில் சமாதானம் ஏற்பட வேண்டும். எமது திட்டத்தின் மூலம் சமாதானம் ஏற்படும் என்று கூறிவிடமுடியாது என சிறிலங்கா கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்ட பிரதிநிதியாக நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த அவர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார். பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

* நீங்கள் உலக உணவுத்திட்ட அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் உங்களினூடாக பிரதேச மக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என நம்பலாமா?

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்குமானால் ஆலோசனைசபை பற்றி ஆலோசிப்போம்

### சனாதிபதியிடம் ரணில் தெரிவிப்பு

சிறிலங்கா சனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை சுமார் ஒரு மணித்தியாலங்களாக நடைபெற்ற இப் பேச்சின் போது ரணில் விக்கிரமசிங்க அவர்களை தமது தேசிய சமாதான ஆலோசனைப் பேரவையில் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை சனாதிபதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ராகவன்,நியூட்டன் நினைவுநாள் நாகர் கோவிலில் அனுஷ்டிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

ஓயாத அலைகள் மூன்று வெற்றிச்சமரில் வீரகாவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத்தளபதி லெப்.கேணல் ராகவன்,

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அரசு–புலிகள் இடைவெளியைக் குறைக்க முத்தரப்பும் தீவிரமாகச் செயற்படவேண்டும்

### கொழும்பில் அகாசி தெரிவிப்பு

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து பேச்சுக்களைத் தொடங்க அரசு, புலிகள், நோர்வே ஆகிய முத்தரப்பும் தீவிரவமாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் கலந்து கொண்ட பின் கொழும்பு சென்று நேற்று அங்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அகாஷி கருத்து வெளியிட்டுள்ளார். இதனபோது அவர் மேலும் கூறியதாவது;

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களின் தன்னாட்சி அதிகார சபையினையே முதன்மைபடுத்தி பேசவேண்டும் மென்பதில் உறுதியாக இருக்கும் அதேவேளை நேற்றைய சந்திப பின் போது விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரின் கருத்துக்களின் படி மாற்று யோசனைகளையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2005 ஆம் ஆண்டு வரியட்டை பெறவும்

2005 ஆம் ஆண்டுக்கான ஊர்திகளுக்கு வரியட்டை வழங்கப்படுகின்ற இதனைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி,மல்லாவி, புதுக்குடியிருப்பு, ஆண்டான்குளம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-கார்த்திகை 2004

01. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.

02. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும் அல்லது கடன்சான்றிதழாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதத்தைக்கொண்டுவர வேண்டும்.

03. கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்.
- ❖ இறப்புச் சான்றிதழ்
- ❖ இறப்புச் சான்றிதழின் படி (பிர
- ❖ கடன் சான்றிதழ்
- ❖ பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
- ❖ பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம.

04. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

05. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கபட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

06. கடன்சான்றிதழைத் தவறவிட்டவர் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

07. கடன் சான்றிதழாளரும் மறுஉரித்தாளரும் இறந்திருப்பின் சட்ட முறையான உரித்தாளருக்கு மீளளிக்கப்படும். சட்டமுறை யான உரித்தாளர் ஒருவருக்கு மேற்படின் உரித்துடைய அனைவருக்கும் சேர்த்து வழங்கப்படும். உரித்துடையவர்களில் எவராவது ஒருவர் ஏனையோரின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் மீளப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வொப்புதல் கிராமசேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தப்படவேண்டும். சட்ட முறையான உரித்தாளர் யார் என்பதை முறைப்படி உறுதிப்படுத்த வேண்டும்.
- ❖ கடன்சான்றிதழாளரின் இறப்புச் சான்றிதழ்
- ❖ மறுஉரித்தாளரின் இறப்புச் சான்றிதழ்
- ❖ இரண்டினதும் படி
- ❖ கடன்சான்றிதழ்
- ❖ கடனை மீளப்பெறவுள்ளவரின் அடையாள ஆவணம
- ❖ கடனைப் மீளப்பெறவுள்ளவரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்
- ❖ மறுஉரித்தாளரின் சட்டமுறையான உரித்தாளர் எத்தனை பேர் என்பதையும் யார் யாரென்பதையும் உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரும் உதவி அரசாங்கஅதிபரும் வழங்கியகடிதம்.

# சுலோக ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் அறிவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சாரத்தை ஒட்டிநடாத்தப்பட்ட சுலோகப்போட்டி, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

சுலோகப் போட்டியில் முதலாம் இடத்தை மாளிகைக்காடு காரைதீவைச் சேர்ந்த ஜனாப் எம்.எச். ஜாபீர் இரண்டாம் இடத்தை முழங்காவில் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வி. பொ.ஆனந்தி மூன்றாம் இடத்தை வேப்பங்குளம் வவுனியாவைச் சேர்ந்த செல்வி. க.ஷாமிலா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஓவியப்போட்டியில்முதலாம் இடத்தை வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தசெல்வி சத்திய சீலன் ஜெயவாணி இரண்டாம் இடத்தை கோயிற்குளம் வவுனியாவைச் சேர்ந்த இராச நாயகம் ஜெராண்ட் நிக்ஷன், மூன்றாம் இடத்தை தரம்-12 இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சுதர்சினி சகாயம் பெர்ணான்டோ ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் சிவசக்தி-ஆனந்தன் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (10)

# காணவில்லை

## முருகேசு செல்வராசா



சொ.இடம் :—மட்டுவில்
வயது :— 50
நிறம் :—கறுப்பு

கொஞ்சம் மனநோய் உள்ளவர். கடைசியாக அணிந்திருந்த ஆடை வெள்ளையில் கோடுபோட்ட சேட் நீலமும், பச்சையும் கட்டம் போட்ட சரம்.

சைக்கிளில் சென்றவர்
**கடைசியாக காணப்பட்டது = 01.11.2004.**

தொடர்புக்கு:-
ஈழநாதம் மக்கள் தினசரி, A9,
கிளிநொச்சி.

(10297)

# கண், காது பரிசோதனைமுகாம்

(அலுவலகசெய்தியாளர்)

"துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் பயிலும் கண், காது குறைபாடுள்ள மாணவர்களுக்கு பரிசோதனை முகாம் ஒன்று 08.11.2004. திங்கள் காலை 9.00மணி முதல்நன்பகல் 12.00மணிவரை துணுக்காய்வலயக்கல்வி அலுவலககேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அன்று விசேடதேவையுள்ள மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடி, காதுகேட்கும் உபகரணம் ஆகியன வழங்கப்படவுள்ளன. எனவே அதிபர்கள், மேற்படி மாணவர்களுடன் உரிய நேரத்திற்கு சமூகமளிக்கும்படி துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மா. தேவேந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (சோ)

# முன்னோடியாகத் திகழ்ந்த மேஜர் சஞ்சிகா

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18
04
1969

உதிர்வு
03
11
1990



**மேஜர் சஞ்சிகா**
**சுந்தரராஜ் கலைச்செல்வி**
**கரவெட்டி கிழக்கு**

அஞ்சாத மனமும் ஆற்றமுகு திறனும்
அசையாத உறுதியும் கொண்டு
தமிழ்தேசிய இனத்தின் வீடுதலைக்கனவு
சுமந்த மேஜர் சஞ்சிகாவே – உன்
கனவினை நனவாக்க களம்பல கண்டு
போராடி உன்னை வீட மற்றவரையும்
மற்றவர் வேதனைகளையும் பெரிதென
மதிக்கும் உயர்பன்பு கொண்ட கலைச்
செல்வியே உன் இலட்சியம் வாழும்.

குடும்பத்தினர்,
இல.115,பாலிநகர்
வவுனிக்குளம்.

(5242)




# முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலையின் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

## அன்பான வாடிக்கையாளர்களுக்கு!





தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இன்று முதல் எமது வாணிபத்தில்
கொள்வனவு செய்யப்படும் பெரியவர்கள் குழந்தைகளுக்கான அனைத்து
தைத்த புடைவை வகைகளுக்கும், சாறி வகைகளுக்கும் 10% சிறப்புத் தள்ளுபடி
வழுங்கப்படும் என்பதை வடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்வதோடு
இச் சிறப்புத் தள்ளுபடி11–11–2004 அன்று தீபாவளி நாளுடன்
முடிவடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**முத்துப்பிள்ளையார் வண்ணச் சோலை**

யாழ்சாலை – கிளிநொச்சி. (சி-10707) யோகபுரம் – மல்லாவி.

# கிறிஸ்தவ-முஸ்லிம் குழுக்களுக்கிடையே மோதல்

# லைபீரியாவில் 14 பேர் பலி 150 பேர் கைது

(மொன்றோயூஸ்)

**லைபீரியாவின் தலைநகரான மொன்றோயூலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளில் 14பேர் கொல்லப்பட்டுள்ளதோடு சுமார் 150பேரை ஐக்கியநாடுகளின் அமைதிகாக்கும் படையினர் கைது செய்துள்ளனர்.**

கடந்த வெள்ளியன்று 5பேரை பலிகொண்ட மோதல்களையடுத்து நேற்றுமுன்தினம் இரு குழுக் களுக்கிடையே புதிதாக மோதல் கள் மூண்டன. இதனைக் கட்டுப் படுத்த 150பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில், லைபீரியாவின் புறநகர்ப்பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை கிறிஸ்தவ, முஸ்லிம் இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட முறுகல்நிலை மோதலாக வெடித் தது. இதில் ஐந்துபேர் கொல்லப் பட்டனர். இந்த வன்முறைகள் பின்னர் ஏனையபகுதிகளுக்கும் பரவியது. இரண்டு சமயங்களைச் சேர்ந்த இளைஞர்களும் பழி வாங்கும் நோக்கிலே தாக்குதல் களை நடத்தியதாக லைபீரிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக வன் முறைகளில் ஈடுபட்ட இளைஞர்கள் அரசாங்கக் கட்டடங்கள் பெற்றோல் நிலையங்கள், வாகனங்கள் ஆகிய வற்றிற்கும் தீமூட்டியதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வன் முறை கட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் தலைநகரில் நேற்று முன்தினம் இரு குழுக் களுக்கிடையே மீண்டும் வன்முறை கள் வெடித்துள்ளன. இந்த வன் முறைச் சம்பவங்களினால் 14பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின் றனர்.

இதேவேளை லைபீரியாவில் ஐக்கிய நாடுகளின் ஆயுதக் களைவுத்திட்டம் நேற்று முன்தினத் துடன் பூர்த்தியடைந்துள்ள நிலை யில் 95 போராளிகள் ஆயுதங்க ளைக் கைவிட்டுள்ளனர். இருந்த போதிலும் பொருளாதார சீரழிவு, தொழிலின்மை காரணமாக லைபீரி யாவின் முன்னாள் போராளிகள் ஆத்திரங்கொண்டு வன்முறைக ளில் ஈடுபட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

## பெண் வியாபாரிகள் பொலிசார் மீது தாக்குதல்

உஸ்பெஸ்கிஸ்தான் புதிய அரசின வரிக் கொள்கையைக் கண்டித்துச் சந்தை வியாபாரம் மேற்கொண்டும் சுமார் 2000 பெண்கள் பொலிசாரையும் வரி அறவீட்டாளரையும் தாக்கியுள்ளனர். பதிலுக்குப் பொலிசாரும தாக்குதல் நடத்தியதையடுத்து பெரும் மோதலாக வெடித்தது. இதனை யடுத்துப் படையினர் வியாபாரிகள் மீது தண்ணீரைப் பாய்ச்சி யடித்து கைகலப்பை நிறுத்தியுள்ளனர்.




அமெரிக்காவில் மேற்கு பாம்பீச் நகரத்தில் ஜோர்ஜ்புஷ்சின் ஆதரவாளர்களும் ஜோன்கெரியின் ஆதரவாளரும் தத்தமது தலைவர்களுக்கு ஆதரவு தரும் சுலோகங்களுடன் சச்சரவில் ஈடுபடுகின்றனர்.

# பிரிட்டனின் பெண் சிப்பாய் ஈராக்கில் கொலை


(பாக்தாத்)

கூட்டணிப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் முதல் தடவை யாக பிரிட்டன் இராணுவத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார்.

இராணுவ பொலிஸ் பிரிவில் கடமையாற்றிய "வின்சேரொஸ்" என்ற 34 வயதுடைய இப் பெண் தென்பகுதியிலுள்ள இராணுவ முகா மில் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் நிபுணர்களின் ஆய்வாளர் குழுவோடு கடந்த 27 ஆம் திகதி ஈராக்கிற்குச் சென்றிருந்தார்.

கூட்டணிப் படைகள் போர் தொடுத்த சமயம் பிரிட்டனைச் சேர்ந்த 45 ஆயிரம் துருப்புக்கள் ஈராக்கிற்குச் சென்றிருந்ததாகவும் தற்போது 8000 ஆயிரத்திற்கும் குறைவான வீரர்களே எஞ்சியிருப்பதாக தெரி விக்கப்படுகின்றது.



பலூஜாவுக்கு அண்மையில் காவலரண் ஒன்றில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள அமெரிக்கக் கடற்படை வீரர்.

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் அமெரிக்காவில் சனாதிபதித் தேர்தல்

(வோசிங்டன்)

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்று வருகிறது. அமெரிக் காவின் நான்கு ஆண்டுகளுக் கொருமுறை நடைபெறும் அதிபர் தேர்தலில் இம்முறை குடியரசுக் கட்சி வேட்பாளராக கடந்த நான்கு ஆண்டுகளாக சனாதிபதியாக இருந்த ஜோர்ஜ்புஷ்சும் சனநாயகக் கட்சிசார்பிலே ஜோன் ஹெரியும் போட்டியிடுகின்றனர். இதற்கென கடந்த ஒரு மாதகாலமாக நடை பெற்ற தீவிர பிரச்சராம் நேற்றுக் காலை நிறைவு பெற்றது.

பிரச்சாரத்தின்போது இறுதி யாகப் பேசிய சனாதிபதி புஷ் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களில் இருந்து அமெரிக்க மக்களைப் பாதுகாப்பது தனது கடமை எனக் கூறினார்.

இளம் தலைமுறையினரின் வாக்குகளைப் பெருமளவில் நம்பி யிருக்கும் அமெரிக்காவின் இரு கட்சி வேட்பாளர்களும் வாக்கு மோசடிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் எனப் பகிரங்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது.

அமெரிக்க சனாதிபதித் தேர்தல் களின் வரலாற்றில் இம்முறை தேர்தலில் அதிதீவிர போட்டி நிலவு கிறது.

40வருடகால வரலாற்றில் இல் லாதவாறு இம்முறை பெரும் எண்ணிக்கையானோர் வாக்களிப் பில் கலந்துகொள்வர் என எதிர் பார்க்கப்படுகிறது. இரு வேட்பாளர் களும் சம அளவான வாக்குக ளைப் பெறுவர் என்ற கருத்து நிலவுவதனால் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற சர்ச்சைகளும் சட்ட அடிப்படையிலான வாதங்களும் மீண்டும் இடம்பெறலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப் போவதாக ஓசாமா பின்லேடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அறிவித் திருந்தது தெரிந்ததே.

# அமெரிக்க படையினரின் தாக்குதலில் மேலும் இரு ஈராக்கியர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் சுனி முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அமெரிக்கப் படையினர் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ள னர். இதன்போது இரு ஈராக்கி யர்கள் பலியாகியுள்ளதுடன் 10 இற்கும் அதிகமனோர் காயமடைந் துள்ளனர்.

ரமாடி நகரில் அமெரிக்க படை யினருக்கும் ஈராக்கிய திவிரவாதி களுக்குமிடையிலான மோதல் களையடுத்து பலூஜா நகரத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தடுத்துவைக்கப்பட்டள்ள உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு பணயக் கைதிகளை விடுவிக்காவிட்டால் திவிரவாதிகளின் நிலைகள் மீது தொடர் தாக்குதல் மேற்கொள்ளப் படுமென்று அமெரிக்க இராணுவத் தினர் எச்சரித்துள்ளனர்.



பலூஜாவில் கைவிடப்பட்ட பாடசாலையொன்றில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படையினர்.

# அணுவாயுத பரவல் தடுப்பு முயற்சிக்கு வடகொரியா தொடர்ந்து அச்சுறுத்தல்

## -சர்வதேச அணுசக்தி ஸ்தாபன தலைவர் தெரிவிப்பு

அணுவாயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் சர்வதேச முயற்சிக ளுக்கு வடகொரியா தொடர்ந்தும் தீவிர அச்சுறுத்தலாக இருந்துவரு வதாக சர்வதேச அணுசக்தி ஸ்தா பனத்தின் தலைவர் முகமட் அல் பிராடி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு அவர் சமர்ப்பித்த ஆண்ட றிக்கையில் அணுவாயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் உலக நாடுக ளின் முயற்சிகளுக்கு வடகொரியா ஒருசவாலாக இருந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அணுசக்திப் பொருட்கள் வட கொரியாவில் பயன்படுத்தப்பட வில்லை என்ற வகையிலான உறுதி சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம் வழங்கமுடியாமல் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடகொரிய தலைநகரிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் தகவல் தருகையில், வடகொரியாவில் ஒன்று அல்லது இரண்டு அணுவாயு தங்கள் உள்ளன என்றும், மேலும் ஆறு அணுகுண்டுகளைத் தயாரிக் கக் கூடிய பொருட்களை அந்நாடு கொண்டுள்ளது என்றும் தெரி வித்துள்ளனர்.




முஸ்லிம்கள் மீது பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்வதை நிறுத்திவிடுமாறு பின்லேடன் கூறியுள்ள நிலையில் ஹொங் கொங்கின் கடையொன்றில் வைக்கப் பட்டிருக்கும் ஓசாமா பின்லேடனின் உருவப்பொம்மை

# சமூகத் தலைவர் ஒருவர் தாய்லாந்தில் சிரச்சேதம்

தாய்லாந்தின் தென் பகுதியில் அமைந்துள்ள பௌத்த கிராமம் ஒன்றில் சமூகத் தலைவர் ஒருவர் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளார். தலை துண்டிக்கப்பட்ட நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அதி காரிகள் கூறுகின்றனர்.

இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்ட முஸ்லீம்கள் உயிரிழந்த சம்பவத்திற்கும் பழிவாங்கும் வகையிலேயே அவர் சிரச்சேதம் செய்யப் பட்டதாக துண்டுப் பிரசுரம் ஒன்றில் எழுதப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய முஸ்லீம்கள் பலர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு நெருக்கமாக முகாம களில் அடைத்து வைக்கப்பட்டார்கள் இச்சம்பவத்தின் போது 78 பேர் மூச்சுத் திணறி இறக்க நேரிட்டது. இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த முஸ்லீம் கிளர்ச்சியாளர்களே கிராமத் தலைவரை படுகொலை செய்திருக் கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. தாய்லாந்தில் முஸ்லிம்கள் பெரும்பாலாக வாழும் தென்பகுதியில் இடம பெறும் வன்செயல்களைக் கட்டுப்படுத்து வதில் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு மன்னர் தாய்லாந்து அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அங்கு இடம்பெற்று வரும் வன்செயல்களில் இதுவரை 85பேர் உயிரிழந்துள்ளனர்.



அகிலஇலங்கை இந்து மா மன்ற ஏற்பாட்டின் பேரில் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒக்டோபர் 30,31 ஆகிய இரு தினங்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடை பெற்றது.'மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மா மன்றத் தலைவர் வி.கைலாசபிள்ளை கிளி/அரச அதிபர் ஆகியோருடன் கலந்து கொண்ட இந்து மா மன்ற நிர்வாகக்குழுவின ரின் படத்தைக் காணலாம். (படம் சோதி)

# பளைப்பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

பளைப்பகுதியில் வயிற்றோட்ட நோயின் பரவுதல் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே பளைப்பகுதி மக்கள் சுகாதார நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுவதில் தீவிர கவனம் செலுத்தும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

கடந்த 28 நாட்களில் 37 பேருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளதாக பளை வைத்தியசாலையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்து நோய்க்கட்டுப்பாட்டிற்கும் நோய்த் தடுப்பிற்குமான நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

கொதித்தாறிய நீரைப்பருகுமாறும் தனிநபர் சுகாதாரத்தை தீவிரமாகக் கடைப்பிடிக்குமாறும் மலம் கழிப்பதற்கு முடிந்த அளவிற்கு மலசலகூடத்தை பாவிக்குமாறும் திறந்த வெளியில் மலங்கழிக்க நேரின் குழிவெட்டிப்புதைக்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் நுளம்புப் பெருக்கம் குடிநீர் அசுத்தமடைதல் போன்றவற்றிற்கு அதிகம் வாய்ப்புள்ளது. இவற்றைத் தடுக்கவும் இதன்விளைவாக ஏற்படும் மலேரியா, டெங்கு வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ளவும் சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொள்ளும்படியும், கொதித்தாறிய நீரைப்பருகும்படியும் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்துகின்றார். (சோ)

# காந்தரூபன் அறிவுச்சோலையை களங்கப்படுத்தும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

## வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் ஆண்டகை

(அலுவலக செய்தியாளர்)

**காந்தரூபன் அறிவுச்சோலையின் மகத்தான பணிக்கு களங்கம் ஏற்படும் வகையில் உண்மைக்குப்புறம்பான கருத்துக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறு காந்தரூபன் அறிவுச்சோலை நெறியாளர் சபைத்தலைவரான வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் காந்த ரூபன்அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தின் பதினோராவது ஆண்டுநிறைவு விழா நிகழ்வில், கலந்து சிறப்புரை ஆற்றுகையி லேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

மொழிப்பற்று, நாட்டுப்பற்று, கலைபண்பாட்டுப் பற்று கலை பண்பாட்டுமரபைப் போற்றுதல் வாழ்க்கைக்கல்வியை வளர்த்தல் போன்ற அம்சங்களின் ஊடாக சமூ கத்தின் உயர்வைக்காண விரும்பும் அறிவுச்சோலையை கொச்சைப் படுத்துவதை நாம் கேட்டும் கேட் காதவர்கள் போல் இருக்க முடியாது.

தாயின் உளத்தை நிகர்த்த தலைவரின் சிந்தனையிலும் ஆதர விலும் உதித்து இயங்கிவரும் நிறுவனம் என்பதாலும் தன்னலம் கருதாதோர் பொறுப்பாளர் ஆகவும் அமைப்பாளர் ஆகவும் காப்பாளர் ஆகவும் ஒருசில அண் ணன்மார் போராளிகள் என்ப தாலும் இப்புனித உன்னத நிறு வனம் புலிகளின் படைக்குஆளணி சேர்க்கும் பயிற்சித்தளம் என கணிப்பது முட்டாள் தனம் என்றே கூறவேண்டும். இவ்வாறு தப்பாகக் கருதுவோர் உண்மைநிலையை அறியாதோராய் அன்றேல் அறிந்தும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டுபவர்களாயும், கண்டும் காணாதவர்களாயும் ஒரு சார்பான பார்வை கொண்ட வர்களாயும் தான் இருக்கின் றார்கள். இவர்கள் சிறிலங்கா அரசி னால் திட்டமிட்டு பரப்பப்படும் பொய்ப்பிரச்சார வலையில் சிக் கியுள்ளார்களோ என்றும் நாம் சிந் திக்க வேண்டியுள்ளது.

உண்மையிலேயே காந்தரூபன் அறிவுச்சோலை சமுதாயத்தின் பரந்துபட்டதுறைகளில் இருந்தும் தெரிவு செய்த உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவ சபை யினால் வழிநடத்தப்படுகிறது. இந்த நிறுவனம் ஆரம்பத்தில் கோப்பாயில் நிறுவப்பட்டபோதி லும் சிறார்களின் பாதுகாப்புக் கருதி பலதடவை இடம்பெயர வேண்டி வந்தது. இந்த மாணவர் கள் முழுமைபெற நலமுடன்வாழ நிதிமுதற்கொண்டு அனைத்து உதவிகளையும் வழங்கிய அனை வரது கரங்களையும் காந்தரூபன் அறிவுச்சோலை இல்லம் பற்றி நிற்கிறது. அரச திணைக்கள அலு வலர்களும், கல்விச்சமூகத்தின ரும், உள்நாட்டு வெளிநாட்டு நிறு வனங்களும்சிறப்பாகப்புலம் பெயர்ந்த உறவுகளும் அறிவுச்சோலையின் சிறார்களை தமிழ் அன்னையின் புதல்வர்களாக கருதி கைகொடுத்து உதவினர் இவர்கள் அனை வருக்கும் எமது நன்றிகள். சிறு துளி பெருவெள்ளம் என வெளி நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய உதவிகளை மறப்பதற் கில்லை.

அறிவுச்சோலை சிறுவர்கள் இன்று பல துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளனர். 2003 க.பொ.த. சாதாரணதரத்தில் 19பேர் தோற்றி 12பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் ஒருவர் 6A எடுத்து சித்திய டைந்துள்ளார். இதே ஆண்டு க.பொ.த உயர்தரத் தேர்வில் 10பேர் தோற்றி 6பேர் சித்தியடைந் துள்ளனர். இதில் நால்வர் கணித நெறிக்கும், இருவர் கலைநெறி க்கும் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர். 2004ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் 6பேர் தோற்றி ஒருவர் முல்லை மாவட்டத் தில் 3ஆவது நிலையிலும், மூவர் 4 புள்ளிகளால் வெட்டுப்புள்ளி இலக்கை அடையவில்லை. இதற்கு முன்னைய தேர்வுகளில் சித்திய டைந்த ஒருவர் பல்கலைக் கழகத்தில் கல்விபயில்கிறார்.

இந்தச்சிறார்கள் தமது ஆற்றலை வளர்க்க பலதரப்பட்ட வாய்ப்புக் கள் அளிக்கப்பட்டுள்ளன. கோட் டம், வலயம், மாவட்டம் போன்ற மட்டங்களில் நடத்தப்படும் மொழி, கலை, நாடகத்திறன் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் படைத் திருக்கிறார்கள் விளையாட்டுத் துறையில் தேசியமட்டத்திலும், தடகளப்போட்டிகளிலும் பங்குபற்றி திறமைச்சான்றிதழ்களையும் பெற்று பாராட்டுக்களையும் பெற்றிருக் கிறார்கள்.

அறநெறிப்பண்புகளை வளர்க்க ஒழுங்கு கட்டுப்பாட்டு முறைகளை சீராகவும், சுயமாகவும் தங்கள் கடமைகளை தாங்களே செவ்வனே செய்யவும் மாணவர்கள் வழிநடத்துப படுகின்றனர். நற்பழக்க வழக்கங் களையும் சமூகக் கடமைகளையும் பெரியோர் வாழ்க்கை வடிவங்கள் செயற்பாடுகள் என்பன மாணவர் களுக்கு சென்றடைய வகை செய்யப்படுகிறது. ஆசிரியர்கள், பயிற்றுனர்கள், உடல்உழைப் பாளிகளின் முன்னுதாரணமான வாழ்வும் சிறார்களின் அறநெறிப் பண்புகளை களங்கமறக்கற்க வழிசமைத்துள்ளது.

ஒட்டுமொத்தமாக சிறுவர் இல் லங்களுக்கெல்லாம் முன்னு தாரணமாகத்திகழும் காந்தரூபன் அறிவுச்சோலையில் சிறார்கள் முழு மனித வளர்ச்சி பெற்று நல்லவர் களாகவும், வல்வர்களாகவும் நேர் மைத்திறன் கொண்டவர்களாகவும் தமது எதிர்காலத்தை எதிர்கொள்ள தொழில் நுட்பப்பாடங்களிலும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

"அறிவு அன்பைப்பெருக்கும்" என்ற கூற்றுக்கிணங்க காந்தரூபன் அறிவுச்சோலையானது தனது அறிவு, ஆற்றல், நன்நெறிப்பண்பு வளர்ச்சி என்பவற்றின் ஊடாக ஒரு அநாதை இல்லம் அல்லாமல் அன்புச்சோலையாக அன்பு இல்ல மாக மாறியுள்ளதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்த அன்பு இல்லத்தின் உலகம் தனித் தன்மையானது இவர்களது குடும்ப வாழ்க்கை இனிமையானது. நிலை யான செயற்பாடுகள் அற்புதமா னவை. திக்கற்ற நிலைபோக்கி இங்கு வாழும் சிறார்களை அறிவுச்சோலை தாயின் பாசமும் தக்க பேணுகையும் கொண்ட தனித்தன்மையான குடும்பச் சூழலில் பராமரித்து வருகிறது. இவ்வாறான மகத்தான பணியை காந்தரூபன் அறிவுச்சோலை ஆற்றி வருகிறது என்றார்.

(லோ,தீ)

## நிதி வழங்கல்

நிகொட்திட்டத்தின் நிதி யுதவியுடன் நெடுங்கேணிப் பிரதேச சபையினர் நெடுங்கேணி பெரியமடு பகுதியில் மீள்குடியமர்ந்த குடும் பங்களில் 25குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க தலா 150,000 ரூபாய் நிதியினை வழங்கியுள்ள னர். அதற்கான பணியில் இம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். (கு,தீ)

# பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்த சங்கம நிகழ்வு

((முல்லை)

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முன்பள்ளிகளின் முன்பள்ளி சிறார்களின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றது.நிறுவனத்தின் முதன்மை ஆசிரியர் திருமதி க.பிரகலதா தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

பொது ஈகச்சுடரினை ஊரக வளாச்சிப்பணி முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் வை.குமரன் ஏற்றினார்.தமிழீழத் தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேசதப் பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றினார்.

நிறுவனக் கொடியினை முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவன மதவாளன் சிங்கக்குள சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் கு.சுந்தரம் ஏற்றினார்.

மங்கல விளக்கினை முள்ளியவளைப்பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.பிரதீஸ்வரி, முல்லைமாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் சிவா ஆகியோர் ஏற்றினர்.

வரவேற்புரையினை ஆசிரியர் ஜெ.குணவதனி நிகழ்த்தினார். கருத்துரைகளை முள்ளியவளைப் பிரதேச ஊரக வளர்ச்சிப்பணி பொறுப்பாளர் பிரதீஸ்வரி, முறிப்பு கிராம அலுவலர் சௌந்தரநாயகம், முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் கு.சுரேஸ்குமார், முள்ளியவளைப் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.பிரதீஸ்வரி ஆகியோர் நிகழ்த்தினார்.

### - வவுனியா மாவட்ட -

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 4.00மணிக்கு இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.என்.வீ. நாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரினை வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் களான சிவநாதன் கிஷோர்,சதாசிவம் கனகரட்ணம், சிவசக்தி ஆனந்தன்,செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகி யோர் ஏற்றிவைத்தனர்.

சிறப்புரைகளை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல்,தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்செய், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் நிகழ்த்தினர். (10)

# வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் தமிழீழக் காவல்துறையால் விரிவாக்கம்

தமழீழ காவல்துறை வீதிப் போக்கு வரத்துப் பிரிவினரால் வீதிப் போக்குவரத்து நடைமுறைகள் விரிவாக்கப்பட்டு வருவதனை காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக வாகனப் போக்கு வரத்து மற்றும் மக்கள் போக்கு வரத்து அதிகரித்துக் காணப்படும் பிரதான வீதி, மற்றும் பாடசாலை களுக்கு முன்பாகவும், நகரப்புற முக்கிய சந்திகளிலும் மேற்படி நடவடிக்கையினை தமிழீழக் காவல்துறை வீதிப் போக்குவரத்துப பிரிவினர்மேற்கொண்டு வருகின் றனர்.

இதன்காரணமாக மக்களின் போக்குவரத்திற்கு ஏற்பட்டு வந்த இடையூறுகள் வெகுவாகக் குறை வடைந்துள்ளதுடன் வாகன விபத் துக்கள் ஏற்படுவது தவிர்க்கப்படு வதற்கு உதவியாக அமைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# திருட முயன்ற தேச விரோத குழுவினருடன் நாயன்மார் கட்டில் பொலிசார் மோதல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். நாயன்மார் கட்டுப்பகுதியில் வைத்து திருட்டுக் கும்பல் ஒன்றை மடக்கிப் பிடிக்க முயன்ற சிறிலங்காப் பொலிசாருக்கும் அத் திருட்டுக் கும்பலுக்கும் இடையே பெரும் கைகலப்பு ஒன்று ஏற்பட்டுள் ளது.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது

யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வரும் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய கும்பல் ஒன்று நாயன்மார், கட்டுப் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் பதுங்கியிருந்த வேளை யாழ் கோப்பாய் பொலிஸ நிலைய பொலிசார் திடீர் நடவடிக்கை ஒன்றின் மூலம் அவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றுள்ளனர்.

பொலிசாரின் இந் நடவடிக்கைகயை உணர்ந்து கொண்ட அத் திருட்டுக் கும்பல் தம்மை மடக்கிப் பிடிக்க முற்பட்ட பொலிசார் மீது கொட்டன்களாலும், கற்களாலும், கம்பிகளாலும் கண் மூடித்தனமாகத் தாக்குதலை நடத்தினர்.

இதனையடுத்து உஷார் அடைந்த பொலிசார் பதில் தாக்குதலை நடத்தியதுடன் சம்பந்தப்பட்ட திருட்டுக் கும்பலில் இருந்து இருவரைக் கைது செய்தும் உள்ளனர்.

இதேவேளை இத்திருட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் யாழ். குடாநாட்டில் இருக்கும் தமிழ்த் தேச விரோதக் குழுக்களுடன் தொடர்புடையவர் எனவும் யாழ்.குடாநாட்டில் இராணுவ ஆதிக்கம் தலை தூக்கியிருந்த போது இராணுவத்தினருடன் இணைந்து யாழில் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் எனவும் அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (33)

# எமது கலை கலாச்சாரத்தை பாதுகாக்க தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## வடமராட்சி கலாச்சார விழாவில் செம்மணன்

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ மண்ணை ஆக்கிரமித்துள்ள இலங்கை ஆக்கிரமிப்புப்படைகள் எமது கலை கலாசாரங்களை அழித்தொழிப்பதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தையும் அழித்து விட முனைப்புக் காட்டி நிற்கின்றன. இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் விழிப்புடனிருந்து எமது கலை மற்றும் கலாச்சாரத்தைத் தொடர்ந்தும் பாதுகாக்க முன் வரவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார். யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.செம்மணன் வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டினில் பிரதேச கலாச்சார விழா கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமையென இரு தினங்கள் இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச சபை பொது மண்டபத்தில் இடம் பெற்ற முதலாம் நாள் நிகழ்விற்கு எழுத்தாளர் க.நடேசுவும் (தென்னியான்) 2ஆம் நாள் நிகழ்விற்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் தலைமை தாங்கினர்.

அங்கு மேலும் உரையாற்றிய சி.செம்மணன் "புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்களிடையே இவ் விடயம் தொடர்பில் போதிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது எமது கலை கலாசாரத்தைப் பேணும் வகையிலான நிகழ்வுகளை அவர்கள் பரவலாக அங்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவ்வாறானதோர் சூழலில் எமது பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற கலாச்சார நிகழ்வுகளில் பெறுமதி வாய்ந்தவை பாராட்டப்பட வேண்டியவை" என்றார்.

முதல் நாள் நிகழ்வில் தமிழ் தேசியக் கட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான திருமதி பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண் டனர்.

நிகழ்வின் இறுதியில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 5 மூத்த கலைஞர்கள் கலாச்சாரப் பேரவையினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இலக்கியத்துறைக்கான விருதுகளை எழுத்தாளர் கந்தையா நடேசு (தென்னியான்) மற்றும் கதிர் தணிகாசலம் ஆகிய இருவரும். அதேபோன்று ஓவியக் கலைக்கான விருதினை பிரம்மஸ்ரீ க.பஞ்சநாத் சர்மாவிற்கும் நாட்டுக் கூத்து கலைக்கான விருதினை பார்வையிழந்த கலைஞனான ஆழ்வாப்பிள்ளை குமாரசாமியும் சங்கீதக்கலைக்கான விருதினை திருமதி சுரோசா தாமோதரம் பிள்ளையும் பெற்றுக்கொண்டனர்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.சிவநேசன் மற்றும் செ.கஜேந்திரன், மேலதிக அரச அதிபர் சி.சிவசாமி மற்றும் கலாச்சார உத்தியோகத்தர் செல்வி சே.செல்வசுகுணா ஆகியோர் வழங்கினர். (27)

# கச்சாய்- புனித லிகோரியார் ஆலய வளவில் பாரிய அமுக்கக் கண்ணிவெடி கண்டு பிடிப்பு

(தென்மராட்சி)

கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய வளவில் இருந்து பாரிய உயிர் ஆபத்தை ஏற்படுத்த காத்துக்கிடந்த சக்தி வாய்ந்த வாகனக் கண்ணிவெடி ஒன்று நேற்று இப்பிரதேச மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் பாரியதொரு உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சக்தி வாய்ந்த வெடிகுண்டு இருந்த பகுதியூடாகவே கட்டடங்கள் கட்டுவதற்கு மணல் ஏற்றும் வாகனங்கள் சென்று வந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. வாகனங்கள் சென்று வந்த இடத்திற்கும் வெடிபொருள் இருந்த இடத்திற்கும் ஒரு அடிக்கு உள்ளே இடைவெளி இருந்ததாக தெரியவருகிறது. (28)

# தென்மராட்சியில் உள்ள அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மனித உரிமை பற்றிய கருத்தரங்கு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விளக்கக் கருத்தரங்கு ஒன்றுக்கு மனித உரிமைகள் அமைப்புக்களால் ஏற்பாடு செய்திருப்பதாக தெரிய வருகிறது. இக்கருத்தரங்கு வரும் வியாழக்கிழமை வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம் தெரிவிக்கின்றது. இக்கருத்தரங்கிற்கு இப்பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் அவர்களால் தவசிக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் முன்பள்ளி கிணறு அமைப்பதற்கும் ஒரு லட்சம் ரூபா நிதியும் அதேபோல் இப் பகுதியில் உள்ள மாதர் சங்கக் கட்டடத்தை புனரமைப்பதற்கு ரூபா 40 ஆயிரம் நிதியும் ஒதுக்கப்பட்டு இருப்பதாக இப்பகுதிக்கான வளர்ச்சிக் குழுவின் பிரதிநிதி இராசையா தெரிவித்துள்ளனர்.(28)

# பயணிகள் போக்குவரத்தை தரமுயர்த்த வெளிநாட்டு உதவி பெறப்படும்

## - போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்

அடுத்த வருடம் நாட்டினுடைய பயணிகள் போக்குவரத்துத் தொகுதியை தரமுயர்த்துவதற்கு வெளிநாட்டுஉதவியைப் பெறத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறிலங்காப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்தியா, சீனா உட்பட பல வெளிநாடுகள் ஏற்கனவே 2005 இல் சிறிலங்காவின் தேசிய போக்குவரத்து சேவையை விஸ்தரிக்க உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளன எனவும் கூறினார். தேசிய போக்குவரத்துத் தினமான ஐப்பசி 29இல் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# உயர் பாதுகாப்பு கடற்பகுதியினுள் கைதான இருவரும் பிணையில் விடுதலை

(நல்லூர்)

உயர் பாதுகாப்பு கடற் பிரதேசத்திற்குள் உட் பிரவேசித்ததாக குற்றம் சாட்டி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இருவர் மல்லாக மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவளன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு 10 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த இராசகுமார் விக்கினேஸ்வரன் சதாசிவம் குமரன் ஆகியோரே பிணையில் விடப்பட்டுள்ளவர்களாகும்.

காங்கேசன் துறைப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் இவர்கள் கடலில் சென்ற கட்டுமரம் இயந்திரம் மற்றும் வலைகளும் நீதிமன்றில் பாரம் கொடுக்கப்பட்டுள்ளன. (41)

# 'கரும்புலிகளின் கீதங்கள்' கவிதை நூல் விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான "கரும்புலிகளின் கீதங்கள்" எனும் கவிதை நூல்கள் வடமராட்சி கல்விவலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ போராட்ட வரலாற்றில் கரும்புலிகளின் தியாகங்களையும், சாதனைகளையும் எடுத்துக்கூறும் இந்நூலினை விநியோகிக்கும் பணிகள் நேற்று முன்தினம் பிற்பகல் நெல்லியடி பொன்னம்பலம் வித்தியாலயத்தில் கவிஞர் தென்னியான் தலைமையில் ஆரம்பமாகியது.

இதில் வடமராட்சிக்கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஆதித்தன், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் உட்பட போராளிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (33)

# சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பு அவசியம்

## -சாவகச்சேரி பி.சபை செயலர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

எமது பிரதேசச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பு சமிபகாலமாக ஒருவித மந்தநிலையில் உள்ளதால் இன்றைய சுற்றாடல் சம்பந்தமான பல பிரச்சினைகள் இப்பிரதேசத்தில் தலைதூக்கி உள்ளதாக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலர் தெரிவித்தார்.

பிரதேசசபை ஊழியர்கள் அனைத்து இடங்களிலும் திருப்தி கரமாக இயங்கமுடியாது என்றும் மக்களின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே இப்பிரதேசத்தை கட்டியெழுப்புவதுடன் சுற்றாடலையும் பேணிப் பாதுகாக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

வெறுமனே புகார் தெரிவிப்பது மட்டுமே மக்களின் பங்களிப்பு என்று நின்று விடாது ஒவ்வொருவரும் சமூக அக்கறை யுள்ள மக்களாக இருந்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என அவர் தெரிவித்தார். கடந்த சில மாதங்களாக உலகஉணவுத்திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் மக்களின் முழுமையான பங்களிப்பு இன்மையால் பாதிக்கப்பட்டு வருவதாக அவர் கவலை தெரிவித்தார். (28)

# வட்டுக்கோட்டையில் திருட்டு இரு சகோதரர்கள் கைது

(நல்லூர்)

வட்டுக்கோட்டையில் உள்ள வீடொன்றில் இடம் பெற்ற களவு சம்பந்தமாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இருவரை பொலிசார் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முன்னாள் ஆஜர் செய்துள்ளனர்.

சந்தேக நபர்களாக வட்டுக்கோட்டை துனைவியைச் சேர்ந்த சகோதரர்களான மகாராசா-சந்திரமோகன், மகாராசா- சுரேஷ் என்ப வர்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களாகும். சுமார் 1இலட்சத்தி 54 ஆயிரம்ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் 27 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டது. சம்பந்தமாகவே இவர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் திருமதி சறோஜினி இளங்கோவன் கட்டளை இட்டுள்ளார். (41)

# கட்டாக்காலி கால் நடைகளால் போக்குவரத்திற்கு இடையூறு

"யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு,மாடுகள் போக்குவரத்திற்கு இடையூறாகவும், விபத்துப் போன்ற வேறு சேதங்களை விளைவிப்பனவாகவும் அலைந்து திரிவதாகப் பலர் மாநகரசபைக்கு முறைப்பாடு செய்துள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் கட்டிவளர்க்காது இவ்வாறு வீதிகளில் மேய்ச்சலுக்காக துரத்தி விடப்படும் கால்நடைகளைப் பிடிப்பதற்கும், அவற்றை மீளளிக்கும் போது அதற்கான தண்டத்தினை வசூலிப்பதற்கும் யாழ்ப்பாண மாநகர சபை முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 05.11.2004 ஆம் திகதியிலிருந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் மேலும் தெரிவிக்கின்றார்.

# தென்மராட்சி பட்டதாரிகளுக்கான பயிற்சி விரைவில் ஆரம்பிக்கும்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் உள்ள பட்டதாரிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் விரைவில் தொடங்க இருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கென இப்பிரதேசத்தில் ஆறு பாடசாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. பாடசாலை ஒன்றிற்கு 50 பட்டதாரிகள் வீதம் மூன்று மாதங்கள் பயிற்சிகள் இடம்பெற இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சங்கத்தானை இந்துக்கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், கைதடி முத்துகுமாரசாமி போன்ற பாடசாலைப் பட்டதாரிகளின் பயிற்சி மையங்களாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (28)

# ஒரு மாதகால ஐரோப்பிய பயணம்

# புலிகளுக்கு கிடைத்த பாரிய வெற்றி

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் தமது ஒரு மாதகால ஐரோப்பியப் பயணத்தில் இரண்டு தசாப்த காலத்தில் அடைய முடியாத வெற்றியை அடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தலைமையின் விடாமுயற்சியினால் அமைந்த இந்தப் பயணத்தின் மூலம் புலிகள் ஐரோப்பிய சமூகத்தின் மத்தியிலும் அங்கு வாழும் இலங்கைத் தமிழர் மத்தியிலும் தமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவையும் அனுதாபத்தையும் தேடிக்கொண்டுள்ளனர். இதன் மூலம் அவர்கள் அடிமைப் படுத்தப்பட்ட ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடும் அமைப்பின் பிரதிநிதிகளாகக் காட்டுவதில் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ முட்டாள் தனமாக தொடர்ந்து புலிகளுக்கு உதவிக்கொண்டிருக்கிறது. அத்துடன் அரசின் வெளிநாட்டமைச்சோ புலிகளின் பிரச்சாரத்திற்கு எதிராக செயற்படாதுள்ளது. இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்து போர் மீண்டும் ஏற்பட்டால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்யக் கூடாதென்ற கோரிக்கை ஐரோப்பாவில் பலமாக எழும் என தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தியுள்ளார். "சண்டே ஐலண்ட்" பத்திரிகையின் பாது காப்புச் செய்தியாளர் தனது கட்டுரையில் மேலும் தெரிவிக்கையில் ஐரோப்பிய சமூகத் தலைநகரான புறூஸ் செல்ஸ் இல் ஏழு உறுப்பினர் அடங்கிய விடுதலைப் புலிகளின் குழுவினர் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பலர் உட்பட ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர் பலரையும் சந்தித்தனர். விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தின் விடா முயற்சியின் பயனாக அரசியல் துறைப்பொறுப்பாளரும், பிரதான பேச்சுவார்த்தையில் ஈடுபடு வருமான சு.ப. தமிழ்ச்செல்வன் தலை மையிலான குழுவினரின் பிரதான நோக்கமாக பிரதான அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள், இராஜதந்திரிகள், மனித நேயமுகவர்கள், கல்விச் சாலைப் பணிப்பாளர்கள் ஆகியோரிற்கிடையில் ஆதரவையும் அனுதாபத்தையும் கட்டியெழுப்புவதன் மூலம் அவர்களுடைய நாட்டினர் எதிர்காலத்தில் சமாதானம் முறிவடைந்து போர் ஏற்படும் போது அரசிற்கு உதவி செய்வதை எதிர்ப்பார்கள். இது சிறிலங்காவின் சர்வதேச சமூக ஆதரவை தமதாக்கும் நடவடிக்கையாகும். இரண்டு தசாப்த போரால் அடைய முடியாததை இந்தப் பயணத்தின் மூலம் உண்மையிலேயே வெற்றி கொண்டுள்ளனர். சிறிலங்காவின் வெளி நாட்டலுவல்கள் அமைச்சு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவினரிடமிருந்து வெளிவரும் பிழையான தகவல்களைத் தடுக்க எதும் செய்யவில்லை. இது இவ்வாறு இருக்க சிறிலங்கா விமானப் படையின் உலங்குவானூர்திகள் மூலம் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான பயணத்திற்கும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர்களின் பாதுகாப்பிற்கு விசேட அதிரடிப்படையை நியமித்தும் தன்னுடைய வழியில் உதவிகளைச் செய்கின்றது. விடுதலைப்புலிகள் இதற்கு முன் ஒரு போதும் செய்யாத நன்கு நுட்பமான திட்டத்தைப் பின்பற்றுகின்றார்கள். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் வாழும் ஐரோப்பிய சமூகத்தில் லண்டன், பரிஸ் இன்னும் சில நாடுகளிலுமுள்ள தமது காரியாலயங்களின் மூலமாக நிதியைப் பெறுவதையே கருத்திற் கொண்டு செயற்பட்டனர். இது அங்குள்ள சில மத்திய தர உறுப்பினர் மூலம் மேற் கொள்ளப்பட்டதோடு ஒரு கொரில்லா இயக்கத்தின் செயற்பாடாகவே தோன்றியது. ஆனால் இப்பொழுது தமிழ்ச் செல்வன் குழுவினர் தாம் ஒருநியாயமான அடிமைப் படுத்தப்பட்ட ஒரு சிறிய இனத்தின் பிரதிநிதிகளாகவும், தமது பாரம் பரிய தாய் நாட்டின் மீதான படை நடவடிக் கையைக் கட்டுப்படுத்தும் ஒரு விடுதலை அமைப்பாகத் தம்மைக் காட்டுவதில் வெற்றி கண்டுள்ளனர். அதாவது ஐரோப்பிய நாடுகள் இதில் மாட்டியுள்ளதுடன் மூழ்கியுமுள்ளன. இக் குழுவில் தமிழ்ச்செல்வன் சமாதானச் செயலக புலித்தேவன், செல்வி, தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதி நிர்வாகத் துறைப்பொறுப்பாளர் பரா, விடுதலைப்புலிகளின் மகளிர் பதில் அரசியல் துறைத்துணைப்பொறுப்பாளர் கீதா, மட்டக்களப்பு அம்பாறை அரசியல்த் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் அடங்குவர். இப் பயணம் ஒக்டோபர் 01 இல் ஆரம்பமானது. அவர்கள் சுவிஸ் சென்று அங்கு 04 நாட்கள் தங்கி சுவிஸ் அதிகாரிகளையும், மூத்த நோர்வே அரச அமைச்சர்களையும் இவர்கள் விசேடமாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழுவினருடன் சூரிச்சிற்கு பிரயாணம் செய்தனர். அடுத்து இதற்கு முன் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு பயணம் செய்யாத வியன்னா- ஒஸ்ரியாவிற்குச் சென்றனர். அங்கு இரு நாட்களே தங்கியிருந்தனர். இந் நாட்டிற்கான பயணம் முக்கியமாக அமையவில்லை. ஒஸ்ரியா ஒரு இயற்கையான நாடு இது உலக அரசியலில் பொதுவாக ஈடுபடுவதில்லை. இருந்தும் இது விடுதலைப்புலிகளின் பயணத்திற் போக வேண்டிய இடமாக இருந்தது. ஒக்டோபர் 09இல் நெதர்லாந்தைச் சென்றடைந்து 13 வரை தங்கியிருந்து பல தரப்பட்ட டச்சு அதிகாரிகளைச் சந்தித்தனர். நெதர்லாந் கடந்த காலத்திலிருந்து சிறிலங்காவின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஒரு அங்கத்தவராக இருந்து வருகிறது. ஒக்டோபர் 13இல் பின்லாந்தின் தலைநகரான கெல்சிங்ரி சென்றனர். இந் நாடு கூட இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் ஒரு அங்கமாகவுள்ள நாடு தமிழ்ச்செல்வன் அரச அதிகாரிகளுடனான தனது சந்திப்பை முடித்துக் கொண்டு அவர்கள் இலங்கையில் போர் நிறுத்தப் பணியில் ஈடுபடுவதைப் புகழ்ந்துள்ளார். பின்லாந்தில் இருந்து பெல்ஜியத்திற்குச் சென்று அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து பெல்ஜிய அரச அதிகாரிகளையும் முக்கியமாக புறுசெல்சில் அமைந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துள்ளனர். அடுத்து தமிழ்ச்செல்வனிற்கு நன்கு பழக்கப்பட்ட நகரான ஒஸ்லோ சென்றனர். அங்கே அவர்களிற்கு அமோக வரவேற்பு நோர்வேயின் வெளி நாட்டலுவல்கள் அமைச்சராலும் ஏனைய உயர் அதிகாரிகளாலும் அளிக்கப்பட்டது. அங்கு நீண்ட நாள் தங்காது இரண்டு நாட் களின் பின் அயல் நாடான சுவீடனுக்குச்



சென்றனர். நோர்வேக்கடுத்தபடியாக உயர் எண்ணிக்கையான போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அனுப்பிய அமைதியான நாடு சுவீடனின் தலைநகரான ஸ்ரொக் கோகோமில் ஒரு நாள் தங்கி இக் குழு ஜேர்மனிக்குச் சென்றது. ஜேர்மனி சிறிலங்காவின் சமாதான முன்னெடுப்புக்களில் பங்கு பற்றவில்லை. இது ஐரோப்பாவில் மிகவும் சக்தி வாய்ந்த நாடாக இருப்பதுடன் இந் நாட்டின் கருத்து ஐரோப்பிய சமூக விடயங்களில் பலம் வாய்ந்தது. அங்கே பெரியளவிலான இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். பின் 25 ஆம் திகதி இக் குழு கொழும்பிற்குத் திரும்ப தயார்ப்படுத்த சூரிச் திரும்பியது. ஆனால் ஐரோப்பியப் பயணம் அங்கே முடிவடையவில்லை. எஞ்சிய விடுதலைப் புலிகளின் குழுவினர் கொழும்பு திரும்ப பிரதான அங்கத்தவர்களான தமிழ்ச் செல்வன், புலித்தேவன், செல்வி ஆகிய மூவரும் சூரிச்சிலிருந்து அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் சென்றனர். அங்கே ஒரு வாரம் செலவிட்டு ஐரிஸ் அதிகாரிகளுடன் வடக்கு அயர்லாந்துப் போர், சிறிலங்காப் போர் பற்றிய ஒத்த தன்மைகள் பற்றிக் கலந்தாலோசித்ததுடன் தமது தொடர்புகளை அயர்லாந்துடன் இறுக்கமாக வைத்திருப்பது பெறுமதி மிக்கது என்பதையும் உணர்ந்துள்ளனர். ஒவ்வொரு இடத்தையும் அடையும் போது விடுதலைப்புலிகள் அமோகமாக வரவேற்கப்பட்டதுடன் இது பெறுமதி மிக்கதும் ஒன்பது ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் தாமாகவே அமைச்சர்கள் மட்டதிலான அதிகாரிகள் அல்லது பிரதி அமைச்சர்கள் அல்லது செயலாளர்கள் அல்லது உயர் மட்டப் பணிப் பாளர்களினால் பிரதி நிதித்துவப் படுத்தப் பட்டுமுள்ளனர். இது சிறிலங்காவின் பிரதி அமைச்சர் ஒருவர் வர வேற்கப்படும் மட்டத்திலானது. குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இந் நாடுகள் யாவற்றிலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவினர் வெளி நாட்டமைச்சரைப் போன்று அரச அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அவர்களிற்கு விடுதி வசதியோ ஏனைய வசதிகளோ தேவை யாக இருக்கவில்லை. அதாவது சகல வசதிகளையும் ஐரோப்பிய அரசாங்கங்கள் தாமாகவே மேற்கொண்டன. விடுதலைப் புலிகளின் குழுவினர் முன்னர் தாம் பய ணத்தை மேற்கொள்ளாத ஐரோப்பிய நாடுகளிற்குச் சென்றதுடன் தாம் முன்பு சந்தித்த முக்கிய அதிகாரிகளைச் சந்தித் ததுடன் பழைய தொடர்புகளையும் புதுப் பித்ததுடன் நட்பையும் உருவாக்கிக்கொண் டுள்ளனர். விடுதலைப்புலிகளின் அரசியல் துறையிலிருந்து ஒரு குழுவினர் தாம் தமது பயணத்தின் போது சந்தித்த பலருடன் ஏற்கனவே நெருக்கிய தொடர்புகளை பேணி வந்துள்ளனர். இவர்கள் சண்டைக் காலங்களில் தமது அனுதாபத்தைக் கொண டிருந்தமை ஈ-மெயில் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தமிழில்: சுகந்தி

---

# படையினர் பாதுகாப்பு கெடுபிடிகளால் வெளியில் நடமாட மக்கள் அச்சம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப்படையினர் கூட்டாக இணைந்து திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் படுகொலை சம்பவங்களைக் கட்டுப் படுத்தும்நோக்குடன் இந் நடவடிக்கையில் ஈடுபடுவதாக பொலிசார் தெரிவித்துள்ளார்.அத்துடன் மட்டக்களப்பு நகரின் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களில் மேலதிக பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், சந்தேகத்திற்குள்ளான நபர்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுகின்றதுடன். போக்குவரத்துச் செய்பவர்களின் பயணப் பொதிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிய வருகிறது.இதேவேளை படையினரின் இவ்வாறான நடவடிக்கை மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தபீதியை ஏற்படுத்தியுள்ளதுடன், பதற்றத்தையும் அதிகரித்துள்ளது. இரவு வேளைகளில் வீடுகளையிவிட்டு வெளியேறுவதற்கு மக்கள் அச்சப்படுவதுடன் வீடுகளிலேயே முடங்கிக்கிடக்கின்றனர்.

## 600 பேர் விண்ணப்பம்

(முல்லை)

ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் புள்ளி விபரமுறையில் பணி புரிவதற்கான எழுதுநருக்கான நேர்முகத் தேர்வு நேற்றும் நேற்று முன்தினமும் முல்லை மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் நடைபெறுகின்றது. 5 உத்தியோகத்தர்கள் தேவையான வெற்றிடத்திற்கு சுமார் 600 பேர் விண்ணப்பம் அனுப்பியிருந்ததாக கச்சேரியின் நிர்வாக அலுவலர் இரத்தினராசா தெரிவித்தார். (20)

# பூநகரி விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கல்

(பூநகரி)

போரூட்நிறுவனத்தின் நிதியுதவியுடன் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கான உள்ளீடுகளும், கால்நடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வு நேற்று புனர்வாழ்வுக்கழகத்தலைவர் பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் செம்பன் குன்று, பள்ளிக்குடா , முட்கெம்பன், கௌதாரிமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பதினெட்டுப்பேருக்கு தலா 2 மாடுகள் வீதமும், 30 பேருக்கு தலா 6 ஆடுகள் வீதமும் மொத்தமாக 48 பேருக்கு கால்நடைகள் வழங்கப்பட்டன. இக் கால்நடைகள் கொடுப்பதன் மூலம் முன்பள்ளி சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்த முடியும் என புனர் வாழ்வுக் கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.இதே தினத்தில் நெற்செய்கைக்கென ஏற்கனவே உழவு கூலி, விதை VI என்ற உள்ளீடுகள் வழங்கப்பட்டு 4 பேருக்கு மிகுதியான ரி.டி.எம். யூரியா, பூச்சி நாசினிகள் என்பனவும் வழங்கப்பட்டன. நெற்செய்கைக்கென கொடுக்த உள்ளீட்டின் பெறுமதி 15.000 ரூ எனவும் தெரிவிக்கப்பட்டது. (34)

## 25.

* ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரில் ஒரு பகுதியினரும் மருத்துவச் சிகிச்சைக்காக சிங்கப்பூரிற்குச் சென்றிருந்த கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையும் வன்னியை வந்தடைந்தனர்.


தாயகம் திரும்பல்

* இராணுவத்துணையுடன் இணுவில் பகுதியில் திறக்கப்பட்ட மதுபான நிலையத்தை மூடிவிடுமாறு கோரி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர்.

* வெள்ளவத்தையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி.

* வடமராட்சி பொலிகண்டிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து தாயினதும், மகளினதும் சடலங்கள் மீட்கப்பட்டன.

* மட்டு-ஆறுமுகத்தான் குடியிருப்பில் வீட்டிற்குள் புகுந்த இனம் தெரியாதோரால் இளைஞன் சுட்டுக்கொலை.

* ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது ஆண்டு நிறைவு தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.

* மட்டக்களப்பில் கிரனைட் வீச்சில் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவர் பலி.

* இலங்கை சமாதான முயற்சிகளில் இந்தியாவால் தலையிட முடியாதென இந்தியாவின் பிரபல ஆங்கிலப் பத்திரிகையான இந்துவின் பிரதம ஆசிரியர் கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தெரிவிப்பு.

## 26.

* தனி ஒருவராக அரசியலமைப்பை மாற்றியமைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என ஐ.தே கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

* அரசிற்கு எதிராக ஐ.தே.க கண்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

* அண்மையில் கொலை செய்யப்பட்ட ஆட்டோ சாரதியின் கொலை தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் வவுனியா நீதிமன்றில் வைத்து அடையாளம் காணப்பட்டனர்.


அடையாளம் காணலில்

* சிரித்திரன் சஞ்சிகையின் மீள் வருகை அறிமுக விழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.


சிரித்திரன் மீள்-வருகை

* மட்டக்களப்பில் சுவிஸ்பிரஜை கொலைக்கு புலிகள் கடும் கண்டனம் தெரிவிப்பு.


* வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் மனித எலும்புக் கூட்டின் சில பாகங்கள் கண்டெடுப்பு.


எலும்புக்கூட்டின் எச்சங்கள்.

* மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட குழுவினர் அயர்லாந்தின் தலைநகர் டப்ளினை சென்றடைந்தனர்.

## 27.

* வடமராட்சி மந்திகைப் பகுதியில் வாகன விபத்தில் சிக்கி தீவகக் கல்விப் பணிப்பாளர் பொன்னையா வேணுகோபால வாணிதாசன் (வயது-53) உயிரிழப்பு.



* ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கைக்கு விஜயம்.

* யாழ்.ஆனைக் கோட்டைப் பகுதியில் வெட்டுக்காயத்துடன் பெண்ணின் சடலம் மீட்பு.

## 28.

* 2006 டிசெம்பருக்கு முன்னர் சனாதிபதித் தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

* அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட குழுவினர் அயர்லாந்து அரசின் வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர்.




* சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படாமல் அரசிற்கு நிதியுதவி வழங்கப்படாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷியிடம் தெரிவிப்பு. அகாஷி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமையும் சந்தித்தார்.

* பி.பி.சி ஒலிபரப்பில் புலிகள் மீதான குற்றச் சாட்டிற்கு திருமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் கடும் ஆட்சேபம் தெரிவிப்பு.

* சிலாபத்தில் மீனவர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

* "ஈழத்து தமிழ் நூல்களில் சமுதாய சிக்கல்கள்" நூல் அறிமுக விழா யாழ். பல்கலைக்கழக கலையரங்கில் இடம் பெற்றது.

* ஈராக்கிய தீவிரவாதிகளால் இலங்கையைச் சேர்ந்த ட்ரக் சாரதி கடத்தப்பட்டார்.

## 29.

* குறுக்கு வழியில் அரசியலமைப்பை மாற்ற அரசாங்கம் முயற்சிக்குமேயானால் புலிகளும் அதேவழியில் புதிய அரசை உருவாக்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கொழும்பில் இடம்பெற்ற இந்துசமுத்திர ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் சனநாயகத்திற்கான ஒத்துழைப்பு மாநாட்டில் தெரிவிப்பு.

* உந்துருளி விபத்தில் சிக்கி யாழ். பல்கலைக்கழக மாணவன் பலி.

* தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்கும் படையினருக்குமிடையிலான சந்திப்பு இடம் பெற்றது.

* ஜேர்மன் நாட்டின் அரசியல் நிபுணர் போல் காட்டர்ஸ் யாழ்.விஜயம்.

* ஜப்பானிய சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை சந்தித்ததுடன், சனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்தார்.

## 30.

* ஜப்பானிய விசேட சமாதான தூதுவர் அகாஷி கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினரைச் சந்தித்தார்.

* வவுணதீவில் விடுதலைப்புலிகளுக்கும்-படையினருக்குமிடையே சந்திப்பு இடம் பெற்றது.

* இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகளுக்கும், யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையே சந்திப்பு இடம் பெற்றது.


யாழ்.இல் சந்திப்பு

* இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்தியக் கொள்கைகள் குறித்து புதுடில்லியில் மாநாடு இடம் பெற்றது.

* சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக்குழுவாகக் கருதப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக சனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

* பரந்தன் குமரபுரம் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றினுள் வீழ்ந்த சிறுவன் பரிதாபகரமாக மரணம்.

## 31.

* இரு முஸ்லிம் மதப்பிரிவினரிடையே காத்தான் குடியில் மோதல்.

* மயிலிட்டிக் கடற்பரப்பில் ஏழு மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்.

* குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அதிகாரி ஒருவர் யாழ்.விஜயம்.

* சனாதிபதியின் சதிச்செயலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்காதென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு.

---

கொப்பேகடுவ சிலை தகர்ப்பு

# புலிகள் திட்டமிடுவதான தகவலுக்கு மறுப்பு

(செட்டிகுளம்)

வவுனியா நகரில் உள்ள கொப்பேகடுவவின் சிலையினை விடுதலைப்புலிகள் தகர்ப்பதற்கு தயாராகியுள்ளதாக வெளியான செய்தியில் எந்தவித மான உண்மையும் இல்லை என்று வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர் ஞாயிறு வார இதழான லக்பிம என்ற பத்திரிகையில் வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள கொப்பேகடுவவின் சிலையினை விடுதலைப்புலிகள் உடைக்க இருப்பதாகவும் மன்னாரில் விக்ரரின் சிலை அமைப்பதற்கு அனுமதி கொடுக்காததன் காரணமாகவே இவ்வாறு விடுதலைப் புலிகள் முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஞாயிறுமுதல் கொப்பேகடுவவின் சிலைக்கு இராணுவம்,பொலிசார் பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள். இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல் துறையினரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இறந்த ஒரு மனிதனின் உருவச் சிலையினை உடைக்கும் அளவுக்கு விடுதலைப் புலிகள் மோசமானவர்கள் இல்லை என்றும் சமாதானத்திற்கு எதிரானவர்கள் விடுதலைப் புலிகளின் மீது இவ்வாறான அவதூறான செய்திகளைச் சுமத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். வவுனியா நகரசபைக்கு முன்னால் இருக்கும் பொங்கு தமிழ் தூபியினை அகற்றுமாறு முன்னர் வன்னி இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பலமுறை முன்னாள் நகரசபைச் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு பொங்கு தமிழ்த் தூபி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் பட்சத்தில் தூபியும் கொப்பேகடுவவின் சிலையும் நகர சபையிடம் அனுமதி பெறாமலே கட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(21)

# கிளி.யில் யுனிசெப் உதவியுடன் நடைபெற்ற சிறுவர் உரிமைகள் பயிற்சிப் பட்டறை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பெ.அ.பு நிறுவனத்தினால் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் சிறுவர் உரிமைகள் தொடர்பான பயிற்சியினை கிளிநொச்சி பிரதேச இணைப்பாளரின் தலைமையில் சிறார்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்பட்டது.

அவற்றில் ஒக்டோபர் 2ஆம், 3ஆம் திகதிகளில் பூநகரிஆலங்கேணி மாதர்சங்க உறுப்பினர் 30 பேருக்கு பூநகரிப் பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் ஆலங்கேணி முன்பள்ளியிலும், கடந்த 16,17 ஆம் திகதிகளில் முழங்காவில் பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் முழுங்காவில், ஜெயபுரம் குமுழமுனை, நாச்சிக்குடா மாதர் சங்க உறுப்பினர்கள் 35 பேருக்கு பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவன மண்டபத்திலும் கடந்த 23, 24ஆம் திகதிகளில் கண்டாவளைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் 30 பேருக்கு கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன மண்டபத்திலும் 30,31 ஆம் திகதிகளில் வட்டக்கச்சி பிரதேச இணைப்பாளரின் ஒழுங்குபடுத்தலுடன் வட்டக்கச்சி சிவிக்சென்ரர் கிராம மாதர் சங்க உறுப்பினர்கள் 30 பேருக்கு முன்பள்ளியில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.



பயிற்சியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நலன் திட்ட உத்தியோகத்தர் ஜெயக்குமார், மதன மோகன், மோகன்ராஜ் ஆகியோர் சிறுவர்களின் நலன், அவர்களின் உரிமைகள், சிறார்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரச்சினைக்கான முக்கிய காரணிகள், சிறார்கள் தொடர்பாக பெற்றோர், ஆசிரியர் சமூகத்தின் பங்களிப்பு பிரச்சினைக்கான தீர்வுகள் எனும் விடயங்களை உள்ளடக்கி பயிற்சி வழங்கியதுடன் பயிற்சியில் வட்டக்கச்சி கிராம அலுவலர், வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினர் ஆகியோர் கலந்துகொண்டதுடன் ஒவ்வொரு பயிற்சியின் நிறை விலும் சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் போன்ற விடயங்களை உள்ள டக்கி சிறு நாடக நிகழ்வுகளை பயிற்சியாளர்கள் செய்ததுடன் கிளிநொச்சி பிரதேச இணைப் பாளரின் நன்றியுரையுடன் பயிற்சிகள் நிறைவு பெற்றன.

(சோ)

# வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)-II
# கிளிநொச்சி மாவட்டம்

# மையக்கிராமத் தெரிவிற்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின் கீழ் மையக் கிராமங்களின் தெரிவு உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களில் நியாப் -II திட்ட நடவடிக்கைகள் (சனவரி) தைமாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே பொது அமைப்புக்கள் (கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்காரர் அமைப்பு) மூலமாக மையக்கிராமத் தெரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் அனுப்ப முதல் தாங்கள் பிரதேச சமுக நலன்விரும்பிகளுடன் கலந்துரையாடி அவர் களின் கருத்துரையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து குறிப்பிட்ட மையக்கிராமங்களின், கிராமசேவை உத்தியோகத்தர் மூலமாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களிடம் அவைகள் உடனடியாக கையளிக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர்களை தலைவராகக்கொண்ட குழுவால் சீராக பரிசீலனை செய்யப்பட்டு, திட்டத் தெரிவு நடைமுறைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்டு பிரதேச செயலர்கள் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தெரிவுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இறுதித்தெரிவு மாவட்ட அரசாங்க அதிபராகிய எனது தலைமையின்கீழ் மாவட்டத் தெரிவுக்குழுவால் இறுதியாக்கப்படும். விபரங்களை 10.11.2004க்கு முன்னர் பொது அமைப்புக்கள் கிராமஉத்தியோகத்தர்களிடம் கையளிக்க வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## மாதிரி விண்ணப்பப் படிவம் நியாப்-II கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்ட ............................ மையக்கிராமத்தின் பொது அமைப்புக்களில் ஒன்றான.................................... இன் நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் நியாப்-II திட்டத்தின் மூலம் பெறும் மையக்கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதியினைப் பெறுவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாப்-IIஎமக்கு நிதியுதவி வழங்கும் பட்சத்தில் அத்திட்டத்தினை கீழ்வரும் நிபந்தனைகளுடன் ஏற்பதாக உறுதியுரை வழங்குகின்றோம்.

01.திட்டத்தினால் அனுமதிக்கப்படும் நன்மைகள், கிராமத்தில்வசிக்கின்ற தேவைப்படும் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

02.திட்ட மூலதனத்தில் இம் மையக்கிராமத்திற்கான ஒதுக்கீட்டின் 7 லிருந்து 10 வீதமான வேலைகளைப் பயனாளிகள் பங்களிப்புச் செய்தல்.

03. திட்டத்தினால் ஏற்படுத்தித் தரப்படும் சொத்துக்களைத்தொடர்ந்து செயற்படுத்தி பராமரித்து வருதலை உறுதிப்படுத்தல்.

நியாப்-II திட்டத்திலிருந்து நிதி பெறுவதற்காக மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பொதுக்கூட்டம் ஒன்றுகூட்டி அதில் மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைவாக இத்திட்டத்தில் நிதிபெறுவதற்கு மக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களின் கையொப்பங்கள் அடங்கிய கூட்டறிக்கையுடனும்,கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடனும் இணைத்துள்ளோம். இந்தக்கிராமத்தை நியாப்-II எடுத்து அபிவிருத்தி செய்யுமாறு கீழ் கையொப்பம் இடப்பட்ட மேற்படி பொது அமைப்பின் நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினர்களாகிய நாங்கள் இவ்விண்ணப்பம் மூலம் கோருகின்றோம்.

| | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 01 | ................................... | தலைவர் | ................................ |
| 02 | ................................... | செயலாளர் | ................................ |
| 03 | ................................... | பொருளாளர் | ................................ |

திகதி:..............................

.......................................
சங்கத்தின் பதிவு இலக்கமும்,
இறப்பர் முத்திரையும்

## பொது அமைப்பால் பூரணப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நியாப் IIமையக் கிராமத்தின் ஆரம்பத் தகவல் அறிக்கை

### 01. மையக்கிராமத்தின் விபரங்கள்

1.1) மையக் கிராமத்தின் பெயர்:......................................
1.2) கிராமசேவகர் பிரிவு:-......................................
1.3) பிரதேச செயலர் பிரிவு: ..............................
1.4) கமநல சேவை நிலையத்தின் பெயர்:-......................
1.5) மையக் கிராமத்தில் குளமிருப்பின் அதன் பெயர்:-
......................................
1.6) குடும்பங்களின் எண்ணிக்கை:-......................................
1.7) உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:..............................
1.8) உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளவந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..............................
1.9) இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வரவிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................
1.10) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கட்டுமானங்கள்:-
அ) வீதி இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
ஆ) பாடசாலை இல்லை/நடுத்தரம்/முற்றாக
இ) வீடுகள் இல்லை/நடுத்தரம்/முற்றாக
ஈ) ஏனைய கட்டுமானங்கள்
பெயா
..............................இல்லை/நடுத்தரம்/முற்றாக
..............................இல்லை/நடுத்தரம்/முற்றாக

### 02. மையக் கிராம நிலப் பயன்பாடு

2.1) நிரந்தரமாக விவசாயம் செய்யப்படும் மேட்டுநிலம் (ஏக்கர்):-..............................
2.2) குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலம் (ஏக்கர்):-..............................
2.3) பாவனையில் இல்லாத நிலம் (ஏக்கர்):-....................
2.4) பிறதேவைகளுக்கு (கட்டடம்,கிணறுகட்ட) பயன்படுத் தக்கூடிய காணியுள்ளதா? ஆம்/ இல்லை:-
2.5) வயற்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ) கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
2.6) விவசாயக் காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ) கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..............................
2.7) காணிஉரிமை எதுவுமில்லாதவர்களின் எண்ணிக்கை....
..............................

### 03.உட்கட்டுமான வசதிகள்

3.1) பாடசாலை உள்ளதா? ஆம் / இல்லை/ஆம் எனில் எண்ணிக்கையை குறிப்பிடவும்
3.2) பொதுக்கிணறு உள்ளதா? ஆம்/இல்லை- ஆம் எனின் எத்தனை:-......................
3.3) பொதுமண்டபம் உள்ளதா? ஆம் / இல்லை
3.4) நீர்ப்பாசனக் குளம் உள்ளதா?ஆம் / இல்லை
3.5) சுகாதார நிலையம் உள்ளதா?ஆம் / இல்லை
3.6) பொதுச்சந்தை உள்ளதா?ஆம் / இல்லை
3.7) வீதிகளின் நிலைப்பாடு:-
நல்லநிலையிலுள்ளது/ இடைத்தர நிலையிலுள்ளது/மிகவும் மோசமானது/ புதிதாகப் போடப்படல் வேண்டும்.

### 04.கிராம அமைவிடம் (k.m)

4.1) மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.2) பிரதேச செயலர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.3) கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.4) கிட்டவுள்ள அரச வைத்திய நிலையத்திலிருந்து தூரம்:-
4.5) கிட்டவுள்ள அரச பாடசாலையிலிருந்து தூரம்:-
4.6) கிட்டவுள்ள தபால் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.7) அமைவிடத்தைக் காட்டும் வரைபடத்தை இணைக்குக.

### 05.கிராம மக்களின் பிரதான வருமானம்

5.1) மேட்டுப்பயிர்ச் செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.2) நெற்பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.3) ஏனைய வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 06.வறுமையின் தன்மை

6.1) நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.2) யுத்தப்பாதிப்புக்களினால் பெண்களின் தலைமையிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.3) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற அங்கத்தவர்களை யுடைய குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.4) யுத்தப்பாதிப்புக்களினால் அநாதையாகவுள்ளவர்களின் எண்ணிக்கை:-
6.5) கிராமத்தில் காணியற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை:-
6.6) நிரந்தர வீடில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 07.மிகவும் பிரயோசனமான கிராமத்திலுள்ள நீர்ப்பா சனத் திட்டத்தின் விபரங்கள் (இருப்பின் மட்டும்)

7.1) குளம்/ அணைக்கட்டு/ குட்டையின் பெயர்:-
7.2) அதற்குச்செல்லும் பாதையின் தன்மை:-
7.3) கிராமத்திலிருந்து அதன் தூரம்:-
7.4) அதன் தற்போதைய நிலைமை:-
1) இயங்குகின்றதா:- ஆம்/ இல்லை
2) உடைப்பெடுத்துள்ளதா:-ஆம்/ இல்லை
3) கூடிய புனரமைப்புச் செய்யப்படல் வேண்டுமா:- ஆம்/இல்லை
7.5) பயிர் செய்யப்படும் காணியின் அளவு:-
1) பெரும்போகம்:-................ 2) சிறுபோகம்:-..............................
7.6) கடந்த ஆண்டு பயிர்செய்திருப்பின் அதன்காணியின் அளவு:-
1) பெரும் போகம்:-.................. 2) சிறுபோகம்:- ......................
7.7) 1. பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை:-......................
2. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-................
3. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்தை விடவேறு இடத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
..................
4) காணியற்ற, ஆனால் இக் குளத்திலிருந்து நீர் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 08.அபிவிருத்தித் திட்டங்கள்

8.1) இக் கிராமம் வேறு ஏதேனும் நிறுவனங்களுக்கூடாக தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றதா?................
8.2) 5 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்:-

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|
| | |

8.3) திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய பொது நிறுவனங்களுக்கு அனுபவம் உண்டா? ஆம்/ இல்லை
8.4) கொடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கை இலக்கை குறிப்பிட்ட நாளில் முடிக்க தடைகள் உண்டா? ஆம்/ இல்லை
8.5 நியாப் திட்டம் Iஇன்கீழ் அபிவிருத்திசெய்யப்பட்டதா? ஆம்/ இல்லை

### 09. வேறு தகவல்கள்

9.1) அழிவுகள் விஸ்தீரணம் (மொத்தமாக அல்லது குறைவாக):-
..............................................................
9.2) நெற்செய்கை மேற்கொண்ட விஸ்தீரணம்:-..............................
சென்ற சிறுபோகம்:-.............. சென்ற காலபோகம்:-...............
9.3) சென்றவருடம் செய்கை பண்ணாவிடில், எவ்வளவு காலம் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டது:-......................
மாதம்:-.............................. வருடம்:-..............................
9.4) மையக்கிராமத்திலிருந்து குளம் எவ்வளவு தூரம்..........Km
9.5) மையக்கிராமத்திலிருந்து குளத்துக்குப் பாதை,பாதையின் வகை:-.............................. தூரம்:-..............................

## கிராம சேவையாளரது சிபார்சு

**எனக்குத் தெரிந்த வரையில் மேல்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என சிபார்சு செய்கிறேன்.**

(ஏதாவது மாற்றங்கள் தவறுகள் இருப்பின் அதனைச் சுட்டிக்காட்டி அறிக்கை இணைத்தல் வேண்டும்)

கிராம உத்தியோகத்தர் ஒப்பம்:------------------------------------------ திகதி:------------------------------

பிரிவு...................................................

(கிராம உத்தியோகத்தர் 15.11.2004க்கு முன்னர் உரிய பிரதேச செயலாளரிடம் கையளிக்க வேண்டும்.)

**இவ் விண்ணப்பங்களுக்கு நியாப் -II நடைமுறைகளுக்கிணங்க பரிசீலிக்கப்பட்டு இக்கிராமம் .......... இடத்தில் உள்ளது இக்கிராமம் எமது தெரிவுக்குழுவின் நிரற்படுத்தலின் போது ............ ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.**

திகதி:- ............................................ பிரதேச செயலகம்.................................... பிரதேச செயலாளர்:-......................................

(இவ்விண்ணப்பங்களை பிரதேச செயலாளர்கள் 19.11.2004க்கு முன்னதாக மாவட்ட செயலாளரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்).

(சி.10294)

# பா.ஜ. தலைமைப்பதவியை அத்வானி ஏற்றதும் ஆட்சி மன்றக்குழு, தேர்தல்குழுவில் மாற்றம்

(புதுடில்லி)

பா.ஜ ஆட்சிமன்றக் குழுவையும் தலைமைத்தேர்தல் குழுவையும் அத்வானி மாற்றியமைத்தார். அகில இந்திய பா.ஜ தலைவர் பொறுப்பை ஏற்றதும் கட்சி நிர்வாகிகளில் அதிரடி மாற்றங்களை அத்வானி செய்தார். செயற்குழு தேசியசெயற்குழுவிற்கு புதிய நிர்வாகிகளை நியமித்தார்.

9 பேர் கொண்ட புதிய ஆட்சி மன்றக்குழுவில் இடம் பெற்றிருப்பவர்கள் வருமாறு இவர்களில் ஷிவராஜ்சிங் சவுகன் ஆட்சி மன்றக்குழு செயலாளராக இருப்பார். பா.ஜ.வில் எந்தப்பதவியும் வேண்டாம் என்று கூறிய வெங்கையாநாயுடு ஆட்சி மன்றக் குழுவில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. 16பேர் கொண்ட தலைமைத் தேர்தல் குழுவிலும் அத்வானி மாற்றம் செய்துள்ளார்.

ஆட்சி மன்றக்குழுவில் உள்ள 9பேரோடு முக்தார்அப்பாஸ் நக்வி, முரளி மனோகர் ஜோஷி, நரேந்திரமோடி, உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் ராஜ்நாத் சிங், ஜார்க்கண்ட், முன்னாள் முதல்வர் பாபுலால் மராண்டி, முன்னாள் மத்தியமைச்சர் அனந்தகுமார், தேவராசந்த்ஹெலாட், ஷிவராஜ் சிங் சவுகன் ஆகியோரும் புதிய தலைமைத் தேர்தல் கமிட்டியில் இடம் பெற்றுள்ளனர்.

முன்னாள் மத்தியமைச்சர் ராம் நாயக் தலைமையில் புதிய ஒழுங்கு நடவடிக்கைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஓ.பி.கோலி, பிரிஜ் லால் ரின்வா, சேசாத்திரிராவ், நந்த்கிஷோர் யாதப் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

கட்சி செய்தித் தொடர்பாளர் பொறுப்பிலிருந்து முக்தார் அப்பாஸ் நக்வி விடுவிக்கப்பட்டு சுஸ்மா சுவராஜ், யஸ்வந்த் சின்கா, அருண்ஜெட்லி, மூவேந்தர்சிங் ஆகியோர் செய்தித்தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பா.ஜ இளைஞர் பிரிவுத்தலைவராக தர்மேந்திரபிரசாத்தும், கிஷான்மோர்ச்சா, தலைவராக அனந்த்சாகிப் பட்டீலும் மகளிர்ப் பிரிவுத்தலைவராக கருணா சுக்லாவும், தாழ்த்தப்பட்டோர் பிரிவுத்தலைவராக ராம்நாத் கோவந்தும், பழங்குடியினர் தலைவராக பக்கன்சிங் குலாஸ்தேயும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வீரப்பனின் சமாதியை பார்க்க மக்கள் கூட்டம்

(சென்னை)

விசேட அதிரடிப்படையினரால் அண்மையில் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட சந்தனக்கடத்தல் வீரப்பனின் சமாதியை ஏராளமான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இவரது சடலம் மேட்டூரை அடுத்துள்ள மூலக்காடு கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டது. தற்பொழுது அந்த இடம் வீரப்பனின் சமாதியாக பலராலும் பார்வையிடப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகளவானோர் இங்கு வந்து இச்சாமதியைப்பார்வையிடுவதுடன் மாலைகளும் அணிவித்து வருகின்றனர். மக்கள் எண்ணிக்கை இப்பகுதியில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. அத்துடன் இச்சமாதியைப் பாதுகாக்க காவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓரிசா சட்டப் பேரவையில் மோதல் முதல்வர் நவீன்பட்நாயக்கிற்குக் காயம்

(புதுடில்லி)

ஓரிசா சட்டப்பேரவையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் முதலமைச்சர் நவீன்பட்நாயக் காயமடைந்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றிற்கு சட்டவிரோதமாக சுரங்கக் குத்தகை விட்டதாக குற்றம் சாட்டிய காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சியினர் இது குறித்து விவாதிக்க மேலும் அவகாசம் தரப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோது பிரச்சினை ஏற்பட்டது.

ஆளுநர் துணைக்கேள்விகளை எழுப்ப அவர்களுக்கு சபாநாயகர் அனுமதி அளிக்காததால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சியினர் அவையின் மையப்பகுதிக்கு விரைந்தார்கள்.

இதன் பின்னர் இடம்பெற்ற மோதலில் முதலமைச்சருக்குக் காயம் ஏற்பட்டது.

# தே. ஜ. கூட்டணியிலிருந்து விலக கட்சிகளுக்கு மார்க்சிஸ்ட் வேண்டுகோள்

மீண்டும் வகுப்பு விரோதத்தைத்தூண்டிவிட பா.ஜ.க. முயற்சி செய்வதால் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து திரிணமூல் காங்கிரஸ், தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் ஆகியவை வெளியேற வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்திருப்பது சங்கப் பரிவாரங்களுடன் கூட்டணி வைத்திருப்பது போலத்தான் என்பதை அக்கட்சிகள் உணர வேண்டும் என பொதுச்செயலர் சுர்ஜீத்தும் பொலிட்பீரோஉறுப்பினர் பிரகாஷ் காரத்தும் நிருபர்களிடம் டில்லியில் திங்கட்கிழமை கூறினர். மீண்டும் அயோத்தி கோவில் பிரச்சினை குறித்து அத்வானி பேசியுள்ளார் இதற்குப் பிறகும் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து அக் கட்சிகள் விலகாவிட்டால் மதச்சார்பற்றவை என்ற பெயரை அக்கட்சிகள் இழந்துவிடும் என அவர் மேலும் கூறினார்.

## மனித உ. ஆணையகம் அமைக்க ஆந்திரப் பிரதேச அரசு முடிவு

மாநில மனித உரிமைகள் ஆணையத்தை அமைக்க ஆந்திரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது என்று முதல்வர் வை. எஸ். ராஜசேகர் ரெட்டி திங்கட் கிழமை அறிவித்தார்.

மனித உரிமைகளுக்காகப் போராடி வரும் அமைப்புக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வரும் கோரிக்கையாகும்.இது ஹைதராபாத்தில் திங்கட்கிழமை நடந்த ஆந்திரப் பிரதேச மாநில அமைப்பு தின விழாவில் பேசிய ரெட்டி இவ்வாறு கூறினார்.


## நாகபூசணி அம்மன் திருமணசேவை

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக்கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)


## வீரவணக்கம்

## 4ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 21 - 06 - 1979



தாயக மண்ணில் 28 - 10 - 2001

**2ஆம் லெப். பாஸ்கரன்**
**புலேந்திரன் பாஸ்கரன்**
தமிழீழ தேசிய துணைப்படை
நி.மு:- 3ஆம் வட்டாரம்
முள்ளியவளை

02.11.2001 அன்று வெடிவைத்தகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரருக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்.**

(5240)

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நலிவுற்றோர் நலவாழ்வுத்திட்ட நிதிக்காக 01.11.2004 அன்று நடாத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பரிசு இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு | :- | 5353 |
| 2ஆம் பரிசு | :- | 4051 |
| 3ஆம் பரிசு | :- | 2493 |

பரிசுக்குரியவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.


"நன்றி"

**சமுதாயமுன்னேற்ற நிலையம்,**
**தலைமைச் செயலகம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(சி.10596)

## 30ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 22 ● 03 ● 1928



மறைவு 05 ● 10 ● 2004

# அமரர் வல்லிபுரம் கனகசபை

ஊற்றங்கரைவீதி - தண்ணீரூற்று
முள்ளியவளை.

எமது நிறுவனத்தில் பணிபுரியும் பாஸ்கரனின் தகப்பனாரின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு இந்நாளில் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அறிவமுது பொத்தகசாலை,**
**கிளிநொச்சி.**

தகவல்:- (சி-10296) பணியாளர்கள்

## கிளி.மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி.

# பதவி விண்ணப்பம் கோரல்

| | | |
|---|---|---|
| 1 | பதவி | :-மாவட்டச் செயலாளர் |
| 2 | வயது | :-25-45 |
| 3 | சம்பள அளவுத்திட்டம் | :-114/09 (5000-110X10-120X10-7300)+1250 |
| 4 | கல்வித் தகைமை | :-கூட்டுறவு ஊழியர் 10வது சம்பள அளவுத் திட்டத்தில் 03 வருட அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரச் சான்றிதழ் க.பொ.த/உயர்/த 03 பாடங்களில் சித்தியுடன் எங்காவது செயலாளராக, கல்வி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய 04 வருட அனுபவம் அல்லது பல்கலைக்கழகப்பட்டம்/முகாமை மட்டத்தில பணியாற்றிய 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம். |

மேற்படி பதவிக்கு தகைமையுடையவர்கள் 20.11.2004ஆம் திகதிக்கு முன் தலைவர், சிக்கனக் கடனுதவுகூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்,
சி.க.கூ.சமாசம்,
கிளிநொச்சி.

(சி-10295)

# இந்திய வீரர்கள் திறமையைக் காட்டத் தவறினர்
# சாதனைத் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் கூறுகின்றார்



'இந்திய வீரர்கள் கடந்த டெஸ்ட் போட்டியில் தங்கள் திறமையை வெளிப்படுத்தவில்லை' என்று அவுஸ்திரேலிய அணி விக்கெட்காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுப்பயணம் மேற்கொணடுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. ரிக்கி பொண்டிங் காயம் காரணமாக இடம் பெறாததால் முதல் மூன்று போட்டிகளுக்கும் விக்கெட் காப்பாளரும் துணைத் தலைவருமான அடம் கில்கிறிஸ்ட் தலைவர் பொறுப்பை ஏற்றார். இவரது தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி சாதனை புரிந்தது விக்கெட் காப்பு, துடுப் பாட்டம் என்ற பொறுப்போடு அணித்தலைவர் பொறுப்பையும் ஏற்று மூன்றையும் மூன்று அவதா ரமாகச் செய்து சிறப்பாக நிறைவேற்றி விட்டார் கில்கிறிஸ்ட்.

நான்காவது டெஸ்ட் மும்பையில் இன்று துவங்குகிறது. இதில்,காயத்தில் இருந்து குணமடைந்த ரிக்கிபொண்டிங் மீண்டும் அணித்தலைவர் பொறுப்பை ஏற்கின்றார். இந்நிலையில் நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு கில்கிறிஸ்ட் அளித்த பேட்டியில் கூறியதாவது.

தலைவர் பொறுப்பை என்னால் நன்றாகச் செய்யமுடியுமா என்ற சந்தேகத்துடன் தான் முதல் போட்டியில் களமிறங்கினேன். ஆனால் எனது மனைவி மற்றும் சகவீரர்கள் அளித்த ஊக்கத்தில் எனது பணியை சிறப்பாக செய்து முடித்துவிட்டேன். கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டதற்காக மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மும்பைப் போட்டியில் பொண்டிங் வருகிறார்.ஒரு சிறப்பான வெற்றியுடன் மீண்டும் அவரிடம் தலைவர் பொறுப்பை கையளிப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

கிரிக்கெட்டில் இந்தியா வலுவான அணி தான் பல சிறப்பான வெற்றிகளை இந்த அணி பெற்று இதை நிரூபித்துள்ளது. ஆனால் இம்முறை இந்திய வீரர்கள் தங்கள் முழுத் திறமையும் வெளிப்படுத்தத் தவறினர். அணியின் முன்னணி வீரர்கள் பலரும் தற்போது பார்மில் இல்லை ஹர்பயன்,கும்ளே,சேவக் இவர்களைத தவிர மற்ற வீரர்கள் ஒரு போட்டியில் கூட தங்கள் உண் மையான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்றார்.

# இந்திய-அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் இரண்டாண்டுக்கு ஒருமுறை நடைபெறவேண்டும்

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்டர்-கவாஸ்கர் கோப்பைக்கான இந்திய-அவுஸ்., டெஸ்ட் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஆஸி., கிரிக்கெட் தலைவர் பாப் மெர்ரிமன் தெரிவித்துள்ளார். ஆஷஸ் தொடரைப் போன்று போர்டர் கவாஸ்கர் தொட ரும் நடைபெற வேண்டும் என்றும் மெர்ரிமன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இது குறித்துத் தெரிவிக்கையில்,

தற்போது ஐ.சி.சி, பரிசீலணையில் உள்ள அட்டவணைப்படி டெஸ்ட் போட்டிக்காக அவுஸ்திரேலியா 2010 இல் தான் இந்தியா வரும். இந்த அட்டவணைக்கு இந்தியாவும் அவுஸ்சும் இது வரை ஒப்புதல் தெரிவிக்கவில்லை.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு அணியும் இன்னொரு அணியின் நாட்டுக்குச் சென்று விளையாட வேண்டும். அதன்படி 2008 இல் அவுஸ்திரே

**மெர்ரிமன் விருப்பம்**


லிய அணி மீண்டும் இந்தியா வந்து விளையாடும்.

ஒவ்வொரு நான்குஆண்டு இடைவெளியில் நாங்கள் இந்தியா செல்லவேண்டும் அதே இடைவெளியில் இந்தியா அவுஸதிரேலியா வரவேண்டும். இதன்படி இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை, போட்டிகள் நடைபெற வேண்டும்.

இதுதான் கிரிக்கெட் ரசிகர்களுக்கு சரியாக இருக்கும். அவர்கள் இதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். 2001 இலும் இந்தியாவில் இதேபோன்ற வரவேற்பு இருந்தது. இதில் ரசிகர்கள் ஆர்வம் அதிகமாக இருப்பதால் நாம் அதற்கேற்ப செயல்பட வேண்டும். 2008 இல் மீண்டும் இந்தியா வருவது அதை உறுதி செய்வதாக இருக்கும்.

இவ்வாறு மெர்ரிமென் தெரிவித்தார். 2007 இல் இந்தியா அவுஸ்திரேலியா செல்லும்.

# நியூசிலாந்து அவுஸ். சுற்றுலா பொண்ட், டபி அணியில் இல்லை



அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் மோதும் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நவ.18 இல் துவங்குகிறது. முதல் இரண்டு போட்டிகள் அவுஸ்திரேலியாவிலும், கடைசி இரண்டு போட்டி நியூசிலாந்திலும் நடக்கின்றன. முதல்போட்டி பிரிஸ்பேன் நகரிலும், அடுத்த போட்டி வரும் நவ.26 இல் அடிலெய்டிலும் நடக்கின்றன. இதற்காக 14பேர் கொண்ட நியூசிலாந்துஅணி நேற்று அறிவிக்கப்பட்டது.

முன்னதாக நடந்த வங்கதேச டெஸ்ட்தொடரில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இதனால் இதே அணி எவ்விதமாற்றமின்றி அவுஸ்திரேலிய தொடருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. உலக சாம்பியனை எதிர்த்து விளையாடும் இந்தத் தொடரிலும், நட்சத்திர பந்து வீச்சாளர்களான பொண்ட், டபி ஆகியோர் இடம்பெறாததுதான் நியூசிலாந்து அணியின் ஒரே குறை.

அணி ஸ்டீபன் பிளமிங் (தலைவர்),மார்க் ரிச்சர்ட்சன், மாத்யூசின் கிளையர்,ஸ்டைரிஸ், நாதன் ஆஷ்லே, ஹமிஸ் மார்சல்,மெக்கல்லம், ஜேக்கப் ஓரம், டேனியல் வெட்டோரி, பிராங்கிளின், கைலே மில்ஸ், பால் வைஸ்மேன், இயான் பட்லர் மற்றும் கிறிஸ் மார்ட்டின்.

# முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து 138 ஓட்டங்களால் வெற்றி

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 138 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 224 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிறிஸ் கெயின்ஸ் 74, ஸ்கொட்டைரிஸ் 43 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் நக்புல் குசேன்



8.2 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் சிறப்பாக ஆடத்தவறியதால் படு தோல்வி அடைந்தது.

31.5 ஓவரில் 86 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஹபிபுல் பஸார் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் மில்ஸ் 14 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுகளையும், ஸ்கொட்டைரிஸ் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது போட்டி நாளை மறு தினம் பகல் இரவு போட்டியாக நடைபெறவுள்ளது.




# டென்னிஸ் போட்டிகள் ஒலிம்பிக்கில் நிலைத்திருக்க வேண்டும்

-மார்க் மைல்ஸ்-

ரஷ்யாவின் அதிகாரியான மார்க்மைல்ஸ் ஒலிம்பிக்கில் டெனிஸ் போட்டிகள் நிலைத்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். எனினும் அது ஒரு குழு போட்டியாக இருப்பதை தான் விரும்புவதாக கூறுகிறார்.

1988ஆம் ஆண்டு முதல் டென்னிஸ் ஒலிம்பிக்கில் அறிமுகப் படுத்தப்பட்டுவருகிறது. சென் பீற்றர்ஸ் பேக்கிற்கு விஜயம் மேற்கொண்டபோது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குழுக்களாக விளையாடுவது வீரர்களையும் பார்வையாளர்களையும் மகிழ்விக்கும் என்றும் கூறிய அவர் எவ்வாறெனினும் முடிவு எடுப்பது சர்வதேச ஒலிம்பிக் சங்கமே என்றார்.

# அவுஸ். அணி வெற்றி பெறும் பொண்டிங்



மும்பை கிரிக்கெட் போட்டியிலும் வெற்றிபெறும் உறுதியுடன் இருப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.


இந்த டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2-0 என்ற நிலையில் ஏற்கனவே கைப்பற்றியுள்ள நிலையில் கடைசிப் போட்டி இன்று மும்பையில் ஆரம்பமாகின்றது.

கடந்த மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் காயம் காரணமாக விளையாடாது இருந்த அவுஸ். அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றார்.

இதற்காக நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்ட பொண்டிங் தமது அணி சிறப்பாக ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

# ரசிகர்கள் எனது பக்கம் இருப்பதால் பந்துவீச்சு தொடர்பான குற்றச்சாட்டு நீங்கிவிட்டது

**கிளிநொச்சியில் முரளி தெரிவிப்பு**



என்னுடைய பந்துவீச்சில் முரண்பாடு இருப்பதாகக் கூறப்படுவது ஒரு தடுமாற்றமானதே. இருப்பினும் ரசிகர்கள் அதைப் பெரிதுபடுத்தாமல் எனது பக்கம் இருப்பதால் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என சிறிலங்காவின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவிக்கையில்,

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த முரளிதரன் மேலும் தெரிவிக்கையில்

எனது தோள்பட்டைக் காயம் பூரணமாக குணமடைந்து விட்டது. மீண்டும் சிறிலங்கா அணியில் சனவரி மாதம் இணைந்து கொள்ளவுள்ளேன்.

போட்டி என்றால் வெற்றி, தோல்வி வருவது வழமையே எனது பங்களிப்பு இல்லாதது சிறிலங்கா அணிக்கு சிறிய பாதிப்பே ஒழிய முழுமையான பாதிப்பு அல்ல.

எனக்கு இலங்கை அணிக்கு தலைமைதாங்க வேண்டும் என்ற விருப்பம் கிடையாது. அணியின் எப்படியென்றாலும் பங்குபற்றினால் போதும் எனவும் தெரிவித்தார்.ஷேன்வோர்னின் சாதனை பற்றிக் குறிப்பிடும்போது சாதனைகள் முறியடிக்கப்படுவதற்கே அவரது சாதனையை முறியடிப்பதற்கு மீண்டும் அணியில் இணைந்து முயற்சிப்பேன் என்றார்.

நீங்கள் ஒரு தமிழ் மகன் என்ற வகையில் தமிழ் தேசியத்திற்காக என்ன பங்களிப்பை வழங்கலாம் என்று நினைக்கிறீர்கள்?

இயலுமான உதவிகளை செய்வதற்கு விருப்பப்படுகிறேன். அதே போன்று எல்லா மக்களுக்கும் உதவிசெய்ய எந்தவகையில் முடியுமோ அந்த வகையில் உதவுவதற்கு விரும்புகின்றேன் எனவும் தெரிவித்தார்

# மாவீரர் ராகவன் நினைவாக தாச்சி சுற்றுப் போட்டி

சாள்ஸ்அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப் கேணல் ராகவன் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவினையொட்டி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வடபகுதி, தென்பகுதி, மத்திய பகுதி ஆகிய அணிகளுக்கான தாச்சி சுற்றுப் போட்டி நடைபெற்றது.


இதில் லெப்.கேணல் சேகர் வெற்றிக் கிண்ணத்தை பெற்ற வடபகுதி அணியே லெப்.கேணல் ராகவன் தாச்சி சுற்றுக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது. மேற்படி லெப்.கேணல் ராகவன் வெற்றிக் கிண்ணத்தினை வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல ஜெயம் அவர்கள் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# ஏ.டி.பி டென்னிஸ் போட்டி மிகைல் யுசானி சம்பியன்

செயின்ட் பீட்டர்ஸ் பர்க் ஏ.டி.பி.,டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் மிகைல் சம்பியன் பட்டம் வென்றார். ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் நகரில் முன்னணி டென்னிஸ் வீரர்கள் பங்குபற்றும் ஏ.டி.பி. டென்னிஸ் தொடர் நடந்தது. ஆண்கள் ஒற்றையர் இறுதிச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.இதில் யுசானி, சுலோவாகியாவின் கரோல் பெக்கை எதிர்த்து விளையாடினார்.

சுமார் 62 நிமிடங்கள் மட்டுமே நடந்த இப்போட்டியில் யுசானி 6-2, 6-2 என்ற நேர் செட்களில் கரோல் பெக்கைளிதில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.



### சிந்தனைக்கு

தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## தேன்நிலவு எதுவரை?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும்– ஜே.வி.பி க்கும் இடையிலான தேன்நிலவு முடிவிற்கு வரும் காலம் நெருங்கி வந்து விட்டதா? என்ற கேள்வி இன்று அரசியல் வட்டாரத்தில் பிரஸ்தாபிக்கப்படும் ஒன்றாகியுள்ளது. ஏனெனில் அந்தளவிற்கு இருதரப்பும் ஒன்றையொன்று பகிரங்கமாகத் தாக்கிப் பேசும் நிலை உருவாகியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்–ஜே.வி.பிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ள போதும் அதன் பிரகாரம் இன்றைய ஆளும் கூட்டணியின் செயற்பாடுகள் இல்லை. குறிப்பாக சுதந்திரக் கட்சி தனது விருப்பத்திற்குச் செயற்படுவதாக ஜே.வி.பி.யினர் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

தேர்தலில் கூட்டணி வென்று ஆட்சி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்ட போதே இருதரப்பினர் இடையேயும் கருத்து வேறுபாடுகள் தலைதூக்கத் தொடங்கின. அமைச்சரவைப் பங்கீடு தொடர்பாக ஏற்பட்ட இந் நெருக்கடியானது தற்பொழுது வளர்ச்சி கண்டு ஒருவரை ஒருவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது.

ஆட்சிக்கு வரும் முன் அமைச்சர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும் என ஜே.வி.பி. யும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மக்களுக்கு வாக்குறுதி அளித்தன. ஆனால் இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரைத்தவிர ஏனைய அனைவரும் அமைச்சர்களாகும். இவ்வாறு ஒருவர் மட்டும் இடம் பெறாமைக்கு சொந்தக்காரணமோ அன்றி விரும்பிய அமைச்சுக் கிடைக்காமையோ காரணமாக இருக்கலாம்.

ஆனால் சனாதிபதியின் இந்நடவடிக்கை ஜே.வி.பி யினருக்குச் சீற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகியுள்ளது. ஒரு புறம் உடன்பாட்டிற்கு மீறிய அளவில் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்துச் செல்வதும் தமது கட்சியின் அமைச்சுப் பொறுபபுக்களை அதிகரித்தமையும் ஜே.வி.பி.யினருக்குச் சீற்றத்தை ஏற்படுத்தக் காரணமாகும்

இந்நிலையில் ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும். கட்டுப்படுத்தும் வகையிலானசெயற்பாடாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியது.இதன் காரணமாக ஆத்திரத்திற்குள்ளான சனாதிபதி சந்திரிகா காணி, விவசாயம் மற்றும் நீர்பாசன அமைச்சர் அனுரகுமார திஸ்ஸநாயக்காவின் 10,000 குளங்களைத் திருத்தும் யோசனைகளைக் கடுமையாக விமர்சித்தார்

இப்போக்கானது இருதரப்பினரும்பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் நிலையை உருவாக்கியது.

இவ்வேளையில் ஐ.தே.கட்சியின் பிரச்சாரச் செயலர் இறுதியாக சனாதிபதி சந்திரிகா தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் சந்திரிகா உட்பட சுதந்திரக்கட்சியினருக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.கடந்த ஆட்சிக் காலத்தில் சனாதிபதி சந்திரிகா ஐ.தே கட்சியினால் அழுத்தத்திற்கு உள்ளான போது அவரைத் தாமே மீட்டெடுத்ததாகவும் தற்போதைய தேர்தல் வெற்றிக்கு தாமே காரணம் என்ற ரீதியில் வீரவன்சவின் கூற்றுக்கள் இருந்தன.

இவ்வாறு வளர்ச்சி கண்ட முறுகல் நிலையானது சிறிலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் உடன்பாட்டை மீறுமானால் அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வேட்பாளரை நிறுத்தும் எனவும் பிரதேச சபைகளில் சுதந்திரக்கட்சிக்கு அளிக்கும் ஆதரவை விலக்கும் என்ற ஜே.வி.பி. யின் எச்சரிக்கை வரை கொண்டுவந்தது

இருப்பினும் ஜே.வி.பி.யினரின் குற்றச்சாட்டுக்களுக்கும் செவிசாய்க்காத சந்திரிகா குமாரதுங்க தனது தேவைக்கும், பதவிக்கும் ஏற்பசெயற்பாட்டை மேற் கொண்டுள்ளார்

ஆனால் இவ் இருதரப்பும் முரண்டுபிடித்துக்கொண்டிருப்பினும் ஆட்சி அதிகாரத்தை துறப்பதற்கு இரு தரப்பும் தயாராக இல்லை. ஜே.வி.பி.யைப் பொறுத்து தமது அரசியல் தளத்தை விஸ்தரிக்க வேண்டிய தேவை உள்ளது. அத்தோடு தற்போதய நிலைபோன்று அமைச்சுப் பொறுப்புக்களில் இருந்துகொண்டு எதிர்க்கட்சிபோல் அரசாங்கத்தை விமர்சிக்கும் வாய்ப்பு என்றுமே கிடைக்கப் பெறப்போவதில்லை.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவிற்கோ அரசியலில் தொடர்ந்து நீடிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி. யின் ஒத்துழைப்பு அவசியமானதாகும். தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஜே.வி.பி.யின் ஒத்துழைப்பின்றிச் சனாதிபதி சந்திரிகாவினால் தனது விருப்பினை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

இந்நிலையில் தான் இரு தரப்பும் முரண்பாடுகளின் மத்தியில் பொறுமை காத்துவருகின்றன. ஒருவரின் தற்போதைய வீழ்ச்சியோ இருவர் இடையிலான பிளவுகளோ ஆட்சி அதிகாரத்தைப் பறித்துவிடும் என்ற நிலையிலேயே அவமானங்களையும் தாங்கிக் கொண்டு பொறுமை காக்கின்றனர். ஆனால் அவமானங்களைச் சகிப்பதும் பிறரை அவமரியாதை செய்வதும் அரசியல் வாதிகளுக்கு ஒன்றும் புதிதல்லவே.

# இந்தியாவின் செயற்பாடுகள் தமிழரிடையே விசனத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது

### — தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.பத்மினி சிதம்பரநாதன் —

(வடமராட்சி)

"இந்திய இராணுவத் தளபதியின் இலங்கைக்கான வருகையும், இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாக வெளிவரும் செய்திகளும் தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், யுத்தத்தைத் தூண்டும் முயற்சி இடம்பெறுகின்றதா? எனும் சந்தேகத்தினையும் உருவாக்கியுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக ஊடகங்களிற்குநேற்று அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் விபரிக்கையில், "தமிழ் மக்கள் இந்தியாவுடன் தமக்கிருந்த உறவைத் தொடர்ந்து பேணவே விரும்புகின்றனர். சமாதானச் செயற்பாட்டை இந்தியா ஆதரிக்கின்றதென்ற செய்தியை ஒரு ஆறுதல் உணர்வுடனேயே தமிழ் மக்கள் நோக்கினர். ஆனால் தமிழ்த் தரப்போடு எந்தவித கலந்துரையாடலும் இல்லாமல் இந்தியாவும், இலங்கையும் ஒரு பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையினை நோக்கி நகர்வது தமிழ் மக்களிற்குஉரிய கௌரவம் கொடுக்கப்படவில்லையென்ற உணர்வையே எமக்குத் தருகின்றது.

இந்த ஒப்பந்த முயற்சி சமாதான செயல்முறையைப் பாதித்து சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு யுத்தத்தில் ஈடுபடுவதற்கான உற்சாகத்தை அளிக்குமென நாம் கருதுகிறோம்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களாக எப்போதும் நடந்ததில்லை. சர்வதேச நிர்ப்பந்தங்களுக்காக இனப்பிரச்சினைத் தீர்வு, பேச்சுவார்த்தை என்று கவர்ச்சிகரமான சுலோகங்களை உதட்டளவில் கூறிக்கொண்டு தமது குறுகிய நலன்களை அடையும் அவாவுடனேயே செயற்பட்டு வருகின்றனர். இத்தகையவர்களோடு இந்தியா ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்திற்குச் செல்ல முயல்வது தம் வாழ்வுக்காகப் போராடும் தமிழ் மக்களை கௌரவப்படுத் தாத ஒருசெயல் என்றும் இலங் கையில் இரத்தக்களறியை மீண்டும் ஏற்படுத்த முனையும் ஒரு முயற்சி என்றும், தமிழ் மக்களின் அதிருப்தியை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வெளிப்படுத்தி நிற்கிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (27,36)

# லான்ஸ் கோப்ரல் ராஜபக்ச இன்று நீதிமன்றில் நிறுத்தப்படுவார்

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்தமை தொடர்பான வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றவரும், யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமல்போனோரின் உறவுகளால் யாழ்.மேல்நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களின் முக்கிய எதிரியுமான சிறிலங்கா இராணுச்சிப்பாய் லான்ஸ் கோப்பிரல் சோமரத்ன ராஜபக்ஷ இன்று யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார்.

இன்று முற்பகல் யாழ்.மேல்நீதிமன்றில் நடைபெறவுள்ள காணாமல் போனோர் தொடர்பான வழக்கின் ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளுக்காகவே அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இன்றுகாலை இராணுவமற்றும் பொலிஸ் பாதுகாப்புகளுடன் விமானம் மூலம் யாழ்.அழைத்து வரப்படவுள்ளார் என யாழ்.சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

# எரிபொருள் விலை அதிகரிப்பினால் பொலிஸ் நடவழிக்கைகளுக்குபாதிப்பு

### திலக் ரணவிராஜா கவனம் செலுத்துகிறாராம்

எரிபொருள் விலை அதிகரிக்கப் பட்டுள் ளமையால் பொலிஸ் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் நடமாடும் சோதனைச் சாவடிகளுக்கும் எவ் வாறான விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதென்பது தொடர்பாக தாம் கவனம் செலுத்தியுள்ளதாக மக்கள் பாதுகாப்புக் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் எரிபோருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமை பொலிஸ்திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய திலக்ரணவிராஜா தமது அமைச்சு, திணைக்களம் மற்றும் நிறுவனங்களுக்கு மாதாந்தம் எரிபொருட்களுக்காக வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் மாற்றம் ஏற்படவில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டினார். இதற்கமைய எரிபொருள் விலை அதிகரிக்கப் பட்டுள்ளதால் குறிப்பிடப்பட்ட நிதியிலிருந்து மாதாந்தம் கொள்வனவு செய்யக்கூடிய டீசல் மற்றும் பெற்றோலின் அளவு குறைவடைந்துள்ளமையை தான் ஏற்றுக் கொள்வதாகவும் திலக்ரணவிராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

# சதொச தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்க அமைச்சரால் முடியாது

### -சனாதிபதியே நீக்க முடியும் என்கிறர் சதொச.தலைவர்

சனாதிபதி சந்திரிகாவே என்னை சதொச நிறுவனத்தின் தலைவராக நியமித்துள்ளார். எனவே என்னைப்பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் சனாதிபதிக்கே உண்டு. அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளக்கு அந்த அதிகாரம் இல்லையென சதொச நிறுவனத்தின் தலைவர் குணரத்ன கூறியுள்ளார்.

நான் எந்தக்குற்றமும் செய்யவில்லை. ஆகவே எவருக்கும் அடிமையாகுவதற்கு விரும்பவில்லை எனக் கூறியதுடன் பிரேசில் நாட்டிலிருந்து 50கோடி ரூபாவிற்கு சீனி இறக்குமதி செய்யும் கோட்டாவிற்கு நான் கையொப்பமிட மறுப்புத் தெரிவித்ததால் என்னைத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

## ஆயுதக் குழுக்களிடையே மோதல் பாணந்துறையில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

நேற்று நண்பகல் பாணந்துறையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இரண்டு ஆயுதக் குழுக்களுக்கிடையிலான மோதலின் போதே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இதன் போது ஒருவர் உயிரிழந்ததோடு மற்றொருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிய வரும் அதே வேளை துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் வீட்டுக்கு குழுவொன்று தீவைத்ததாகவும் இதனால் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

# கடவானையில் புலிகள் முகாமை
# வைத்திருக்கவுமில்லை; அமைக்கவுமில்லை

## திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

திருகோணமலை பாலம் போட்டாறு காட்டுப் பகுதிக்குள் கடவானையில் விடுதலைப் புலிகள் முகாம் எதையும் வைத்திருக்க வில்லை, புதிதாக அமைக்கவு மில்லை என்று விடுதலைப் புலிக ளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

கடவானைப் பகுதிக்குள் விடுதலைப் புலிகளின் புதிய முகாம் கண்டுபிடிக்கப்பட்டு கடற் படையினரால் அழிக்கப்பட்டதாக கடற்படையினர் வெளியிட்ட அறி விப்பு புதிதாக முகாம்களை விடு தலைப் புலிகள் அமைத்து வரு கின்றார்கள் என்ற மாயையை உறுதிப்படுத்துவதற்காக சோடிக் கப்பட்ட கர்பனை என்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

கடற்படையினர் இராணுவத் தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியான அந்த இடத்தில் விடுதலைப் புலி கள் யுத்த நிறுத்தத்திற்கு முன்ன ரும், பின்னரும் தங்களின் முகாம் எதனையும் அமைக்கவே இல்லை என்றும் எழிலன் குறிப்பிட்டார். அரச படையினர் வித்தியாசமான செயற்பாடு ஒன்றை மேற்கொள் ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கை யாக இக்கட்டுக்கதையை உருவாக்கி வெளியிட்டது என்ற சந்தேகம் எழும்பியுள்ளதாகவும் எழிலன் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவரை அவரது அலு வலகத்தில் எழிலன் சந்தித்து இது தொடர்பாக உரையாடினார். அப்போது பாலம்போட்டாறு பகுதி யில் விடுதலைப் புலிகளின் முகாம கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் அழிக்கப்பட்டதாக அரச வானொலி மூலம் அறிந்த தாக எழிலன் கண்காணிப்புக்குழு வின் பதில் தலைவரிடம் தெரிவித் தார். புதிய முகாம் ஒன்று இருப்பது பற்றி கண்காணிப்புக்குழு தம்மிடம் முதலில் அறிவிக்கவில்லையே என்றும் எழிலன், கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவரிடம் தெரி வித்தார். கடற்படையினருடன் சம் பந்தப்பட்ட இடத்திற்குச் சென்ற கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், தாம் செல்வதற்கு முன்பு அது குறித்து விடுதலைப் புலிகளின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. அதுபற்றி விசாரிக்கவுமில்லை என்றும் மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் முகாம் கண்டுபிடிக்கப்பட்டது, அழிக்கப் பட்டது என்பதெல்லாம், அரச படை யினரால் திட்டமிட்டு தயாரிக்கப் பட்ட கற்பனைக்கதை என்றும் எழிலன் வலியுறுத்தினார். (25)

# காத்தான்குடிப் பகுதியில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுல்!

காத்தான் குடிப் பகுதியில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது.இங்கு பெரும ளவு பொலிசாரும், இராணுவத்தின ரும் நிலமைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை அங்கு ஏற்படுத் தப்பட்டிருந்ததற்ற நிலமையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவ தற்குகாக நேற்றுப் பிற்பகல் காத் தான் குடி பிரதேச செயலகத்தில் சமாதானக் கூட்டம் ஒன்று நடை பெற்றது.இதில் முஸ்லிம் மக்கள் ஒன்றியமும் முஸ்லிம் மக்கள் பிரதி நிதிகளும் பங்கு பற்றினார்கள் இதில் அமைச்சர் அமீர் அல வானொலி சேவைகள் நிறுவனத் தலைவர் எ.எல்.எம்.கிஸ்புல்லா மாவட்ட அரசாங்க அதிபர் வே.சண முகம் ஆகியோர் ஏற்பாட்டில் இம் மாநாடு நடைபெற்றுள்ளது. இதன் போது நிகழும் ரமழானின் மாதத்தில் விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளுமாறும் அதனடிப் படையில் தொடர்ந்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள ரமழான் மாதம் முடிந்த பின் சமாதான முயற்சியில் ஈடுபட முடியுமெனவும் கூறப்பட்டுள்ளது.

காத்தான்குடியைப் பொறுத்த வரையில் அறுபதாயிரம் முஸ்லிம் கள் உள்ளனர். இதில் 58 ஆயிரம் பேர் இஸ்லாமிய மதத்தையும் இரண்டாயிரம் பேர் ரவுப் மௌலவி என்ற ஒருவரின் தலைமையில் இயங்கும் மதத்தையும் பின்பற்றி வருகின்றனர். எனவே இவர்களை இஸ்லாமிய மதத்தினர் புறம்தள்ளி வைத்திருப்பதாகவே கருதப்படு கிறது. எனவே அவர்களும் இஸ் லாமியர்களுக்குமிடையிலான மோதலே கடந்த சில நாட்களாக காத்தான் குடிப்பகுதியில் இடம் பெற்றதனால் அங்கு பத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். (32)

# புதுக்குடியிருப்பு,கிளிநொச்சியில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு

(புதுக்குடியிருப்பு)

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு புதுக்குடியிருப் பிலும் கிளிநொச்சியிலும் நடைபெறவுள்ளது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட நட வடிக்கைக் குழுவினர் இணைந்து நடாத்தும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பற்றிய ஆரம்பநிகழ்வு நாளை காலை 10.00மணிக்கு புதுக்குடியிருப்பிலுள்ள முல்லை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து முல்லை மாவட்ட நட வடிக்கைக்குழு யாழ்.மாவட்ட நடவடிக்கைக்கு கிளிநொச்சி மாவட்ட நடவடிக்கைக்குழு ஒருங்கிணைந்து 5ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப் பற்றிய நிகழ்வு இடம்பெறவுள்ளது. (08)

# அக்கினிப் பறவைகள் பாகம்-02 மன்னாரில் வியாழன் அறிமுக விழா

தமிழீழ விடுதலைப் பய ணத்தில் மகளிர் படையணியின் வரலாற்றை சித்தரிக்கும் விவர ணப்படம் "அக்கினிப் பறவைகள் பாகம்-02" அறிமுகவிழா மன்னாரில் நடைபெறவுள்ளது. நாளை மாலை 2.00 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் மேற்படி அறிமுக விழா நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

### ராகவன்...

தாக்குதல் தளபதி லெப். கேணல் நியூட்டன் ஆகியோரது ஐந்தாம் ஆண்டு நினைவுதினம் நேற்றுக்காலை நாகர்கோவில் கள முனைப் பகுதியில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதி லெப்.கேணல் கோபித் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை வடபோர்முனை கட்டளைத்தளபதி கேணல் ஜெயம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் கொடி யினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத்தளபதி லெப்.கேணல் நகுலன் ஏற்றிவைத் தார். திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் நிர்வாகப் பொறுப்பாளர் முத்தழகு, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தாக்குதல் தளபதி, பிரதாபன் ஆகி யோர் ஏற்றிவைத்தனர். திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணி யின் பொறுப்பாளரில் ஒருவரான தென்னரசன், கட்டளைப் பணியகத் தைச் சேர்ந்த இளையவன் ஆகி யோர் அணிவித்தனர். மலர்வணக் கம் அகவணக்கத்தினை தொடர்ந்து நினைவுரையினை லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவுப் பொறுப் பாளர் கீதன் ஆகியோர் நிகழ்த் தினர். (சோ)

### 2005 வரி...

ஆகிய இடங்களில் அமைந்துள்ள போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பிரதேச செயலகங்களில் விதிமுறைக ளுக்குகமைய 2005 ஆம் ஆண்டு வரியட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

### முரளிதரன்...

ருன்யசிறி சீடா நிறுவன திட்ட ஆலோசகர் பற்றிக்புறோசட் அபி விருத்தி அமைய ஆலாசகா யேர்சிஸ டான்லி அவுஸ்திரேலியா பிரதி உயர்ஸ்தானிகர் மாதேவ் ஜஹ டெஸஆகியோர் அடங்குகின்றனர்.

நேற்று முகமாலை சோதனைச் சாவடி ஊடாக வருகைதந்த இவர் கள் முதலில் பூநகரிப் பிரதேசத்தில். தமது அமைப்பினால் மேற்கொள் ளப்பட்டும் நடவடிக்கைகளை நேரடி யாகச் சென்று பார்வையிட்டனர்.

பூநகரிக்கு இவர்களுடன் கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவர்கள், கிளி நொச்சி கல்விவலயப் பிரதித்திட்ட மிடல் பணிப்பாளர் எம.பத்மநாதன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வாக பாடசாலை நுழைவாயிலிலிருந்து மாணவர்க ளால் மாலைசூட்டி அழைத்து வரப் பட்டனர்.

பொதுச்சுடரை பூநகரிப் பிரதேச கடற்புலிகளின் பொறுப்பாளர் வேங்கைத்தமிழன் ஏற்றிவைத்த துடன் தேசியக்கொடியையும் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை பாடசாலை முதல்வர் பொன். தில்லைநாதன் ஏற்றினார்.

மண்டப நிகழ்வாக மங்கள விளக்கினை வருகைதந்த பிரதிநிதி கள் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம்பெற்றது. பாடசாலை முதல்வரினால் வரவேற்புரை நடாத் தப்பெற்றது. தொடர்ந்து சிறப்புரை யினை உலக உணவு வதிவிடப் பிரதிநிதி ஜெவ்.டப்.டிக்.முத்தையா முரளிதரன், அரச அதிபர் தி.இராச நாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அரங்க நிகழ்வைத் தொடர்ந்து வருகை தந்திருந்த உயர் அதி காரிகள் அனைவரும் பாடசாலை வகுப்பறைகளுக்குச் சென்று மாண வருக்கு உணவு வழங்குவதனை அவதானித்தனர். 12.00மணிக்குப் பின்னர் நல்லூர் ம.வி.இற்குச் சென்ற முரளிதரன் இருதொகுதி கிரிக்கெட் உபகரணங்களைக் கையளித்த துடன் மாணவருடனும் உரையாடினர் என்பது குறிப்பிடத் தக்கது. பின்னர் கிளிநொச்சியி லுள்ள சமாதானச் செயலகத்தில் அரசியல் துறை துணைப்பொறுப்பா ளர் சோ.தங்கன் அவர்களை சந்தித்து ஒரு மணி நேரம் கலந்து ரையாடி உள்ளார்.

இக் கலந்துரையாடலில் உலக உணவுத் திட்டத்தின் நன்கொடை யாளர்கள் அனைவரையும் ஒரு நட்புறவோடும் அவர்கள் எமது பிர தேசத்தில் மேற்கொள்ளும் நடவடிக் கைகள் விடுதலைப்புலிகளின் அனு சரனையோடு இயங்கவேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடிய தாக சோ.தங்கன் அவர்கள் தெரி வித்துள்ளார். இச்சந்திப்பினைத் தொடர்ந்து இக்குழுவினர் கிளி நொச்சியிலுள்ள தொழில்நுட்ப கல்லூரி யினையும் பார்வையிட்டு சென்றுள் ளனர். (சோ,கு)

### அரசு...

செவிமடுக்க தயாராக விருப் பதைத் தான் உணர்ந்து கொண்ட தாகவும் அவர் கூறியுள்ளார்.

### புலிகளுடன்...

வலியுறுத்தியதோடு ஐக்கிய தேசிய கட்சிஇது தொடர்பான தனது தற்போதய நிலைப்பாட்டை மாற்றி சமாதானப் பேரவையில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் கேட் டுள்ளார். இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒஸ்லோ, பிரகடன அறிக்கை மற்றும் டோக் கியோ பிரகடணம் தொடர்பாக தனது கட்சி அண்மையில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள தெனவும் இதனடிப்படையில் விடு தலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவ சியத்தை சனாதிபதிக்கு எடுத்துக் கூறினார். தனது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின் புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் தொடர்பாக புதிய அறிவிப்புக்களை சனாதிபதி விடுக் கலாமென எதிர்பார்க்கப்படுகின் றது. அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம் பிக்கப்படும் பட்சத்தில் சனாதிபதியின் சமாதானத்திற்கான தேசிய ஆலோ சனைச் சபையில் கலந்து கொள்வது பற்றி தமது கட்சி ஆலோசிக்கு மெனவும் கூறியுள்ளார். அத்தோடு சமாதான நகர்வுகள் தொடா பாக சனாதிபதியுடன் எந்த நேரத்திலும் தான் பேசத் தயாராகவுள்ளதாக வும் கூறியுள்ளார். (32)

### நாட்டில்...

நாங்கள் தென்பகுதி மக்களுக் குச் செய்யும் உதவிபோன்றே வடபகுதி மக்களுக்கும் செய்ய நினைக்கிறோம். ஆனால் இங்கு மேலதிகமான பிரச்சினையாக இனப் பிரச்சினை ஒன்று இருக்கிறது என்றாலும் ஐ.நா.அமைப்பு என்னை இங்கு சென்று உதவிகளை மேற் கொள்ளுமாறு கேட்டுள்ளது. அதற் கேற்ப பணியாற்றுகிறேன்.

* இந்த உலக உணவுத்திட்ட அமைப்பின் மூலம் இந்த நாட்டில் இரு சமூகங்களுக்கிடையிலான பிரச்சினை தீர்க்கப்படுமா?

அப்படி என்று சொல்வது கடினம் ஏனெனில இரண்டு சமூகங்களை யும் ஒன்று சேர்க்க வேண்டுமாயின் முதலில் சமாதானம் ஏற்படவேண்டும் எமது திட்டத்தின் மூலம் சமா தானம் ஏற்படும் என்று கூறமுடியாது. உலக உணவு அமைப்பின் பணியா னது ஏழைச்சிறார்களுக்குப் போதிய போசாக்கை வழங்குவதும் அவர் களை மகிழ்ச்சியாக இருக்கவைப் பதுமே.

* முரளிதரன்-குணசேகர இணையத்தளம் என்ன செய்ய விருக்கிறது?

கடிதங்கள் மூலமும் இணையத் தள வேண்டுகைகள் மூலமும் விடுக்கப்படும் வேண்டு கோள்களை நிறைவேற்றுவது. அரச சார்பற்ற நிறுவனங்களைப் போன்று கோரிக் கைகளை நேரடியாக நிறை வேற்ற முடியாது. எனினும் எங்க ளால் செய்யக்கூடியதைச் செய்ய முயற் சிக்கிறோம்.

* சமாதானம் பற்றி என்ன கூறு கின்றீர்கள்?

அதுதொடர்பாகச் சம்பந்தப் பட்ட தலைவர்களில் ஒருவருடன் கதைத்தேன். அவர்கள் சமாதானத் திட்டம் பற்றிப் பேசுவதற்கு விருப் பம் தெரிவிக்கிறார்கள். எனினும் இடைக்காலசபை பற்றி ஆலோசிப் பதற்கே அவர்கள் எண்ணுகின்றனர்.

அதன் மூலம் நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண விரும்புகிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் நிலை என்ன என்பது பற்றி எனக்குச் சொல்ல முடியாது. ஆனாலும் தென்பகுதி யிலுள்ள மக்கள் பெரும்பாலோ ருக்கு சமாதானமே தேவை. ஆகவே அரசு பேச்சுக்கு வந்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும்.


நீங்கள் அதற்காக என்ன ஆலோசனை கூறுவீர்கள்?

நான் ஒரு கிரிக்கெட் வீரர் என்ற வகையில் கிரிக்கெட்டில் சகல சமூகத்துவரும் பங்கேற்கிறோம். அதேபோல சமாதானத்தையும் அனைவரும் விரும்பவேண்டும்.

* உங்களுடைய இறுதி இலட்சி யம் என்ன? நான் ஒரு சிறந்த மனிதநேய சேவையாளராக இருக்க வேண்டும் என விரும்பு கிறேன்.

### சந்திரிகாவின்...

நாட்டமைச்சர் போன்றோரையும் அவர் சந்திக்கவுள்ளார். இதே வேளை இன்று இந்தியா செல்லும சனாதிபதி அங்கு இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச் சாத்திடு வதற்கான திகதியை நிர்ணயிப்பார் எனத் தெரியவருகிறது. (32)


உலகத்தரம் வாய்ந்த கொரிய நாட்டுத் தயாரிப்பான
HITACHI 14" கலர் TV
இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்
மின்சாரத்திலும் பற்றியிலும் இயங்கத்தக்கது.
(AC/DC)
ஒரு வருட உத்தரவாதம்
(HITACHI கலர் TUBE)
யாழ்ப்பாணத்தில்:-
யாழ்ப்பாண மின்னகம்
இல- 141 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். T.P-0212225766

கிளிநொச்சியில்:-
எழிலகம்
புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி. (சி-10709)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.